-Registered as a News Paper பக்கங்கள் 06. விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 23 (09 - 10 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 234

## சர்வகட்சி மாநாடு அமர்வுகள் இடைநிறுத்தம்

பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக ஒருமித்த கருத்தொன்றை உருவாக்குவதற்கு வழிசமைத்துக் கொடுக்கும் முகமாக சர்வ கட்சி மாநாடு தனது அமர்வுகளை இடைநிறுத்தியுள்ளது என்று தெரியவருகிறது. முழுத் தீர்வுத் திட்டத்தையும் தயாரிப்பதில் பாராளுமனறத் தெரிவுக் குழுவுக்கு உதவும் முகமாகவே சர்வகட்சிமாநாடு அமர்வுகள் இடைநிறுத்தப்படுவதாக அமைச் சரும், சர்வகட்சி மாநாட்டுத் தலைவருமான ஏ. சீ எஸ். ஹமீத் கூறியுள்ளார். மேலும்கூறுகையில் இதன்மூலம்சர்வகட்சிமாநாடு செயலிழந்து விட்டதுஎன்று அர்த் தமாகாது எனவும் தேவைப்படின் அதுமீண்டும் செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

## ஆலங்கேணியிலிருந்து கிளாலிக்கு சென்ற

# பயணிகள் படகுகள் மீது கடற்படை சூடு; 7 பேர் பலி; இருவரைக் காணவில்லை

## இருவர் நீந்திக்கரை சேர்ந்தனர்

ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கிப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இரு படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற் கொண்ட தாக்குதலில் இரு பெண்கள், இரு ஆண்கள், ஒரு சிறுவன் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதாக அஞ்சப்படுகிறது, இதேவேளை துப்பாக்கிப் பிரயோகத்தின்போது கடலில் பாய்ந்த இருவரைக் காண வில்லை எனவும், இருவர் நீந்திக் கரைவந்து சேர்ந்ததாகவும் செய் திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, ஆலங்கேணி இறங்குதுறையிலிருந்து நேற்று அதிகாலை 2-30 மணியளவில் கிளாலி நோக்கி புறப் பட்டு வந்த இரு படகுகள் மீது சிறிலங்கா கடற்படையி னர் துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்டுள்ளனர்

இப்படகுகளில் ஒன்றில் இரண்டு படகோட்டிகள் உட் பட ஒன்பது பேர் இருந்ததா கவும் மற்றைய படகில் பொருள்களுடன் இரு பட கோட்டிகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது அதி காலை 3-00 மணியளவில் இப்படகுகள் ஆலங்கேணி சூரமுனை கடற்பரப்பில்வந்து கொண்டிருந்த போது அவ் விடத்திற்கு வந்த சிறிலங்கா கடற்படைப் படகுகள் இவற் றின்மீது துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்டன.

பெண்கள் உட்பட ஏழு பேர் பலியாகியிருக்கலாம் என அஞ் சப்படுகிறது. படகோட்டிகள் இருவரும் கடலில் பாய்ந்து நீந்தி கரைவந்து சேர்ந்தனர்

பொருள்களை ஏற்றிவந்த படகில் இருந்த ஓட்டிகள் இரு வரும் கடலில் பாய்ந்ததாக வும், ஆனால் அவர்களின் நிலைபற்றி எதுவும் தெரிய வில்லை எனவும் அறிய வரு கிறது

இவ்விரு படகுகளையும் கைப்பற்றிய கடற்படையி னர், இறந்தவர்களின் சடலங் கள், பொருள்கள் என்பவற்று டன் அவற்றை ஆனையிறவு முகாமிற்கு இழுத்துச் சென்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது.



## சடலங்களின் மறைவில் கிடந்து கடலில் பாய்ந்து தப்பினேன்

### -படகோட்டி தகவல்

(நமது நிருபர்)

சடலங்களுக்கும், பாய்க்கும் இடையில் இறந்தவர்போல் நடித்துவிட்டுப் படகிலிருந்து பாய்ந்து தப்பிவந்தேன் என நேற்று கிளாலி கடற்பகுதி நெருங்கிவந்துகொண்டிருந்தது அது சிறிலங்காவின் கடற் படைப் பீரங்கிப்படகு என் பதை உணர்ந்துகொண்ட நான் பாய்க்குள் பதுங்கி விட் டேன். ஏனையோர் ஐயோ ஐயோ எங்களைச்சுடவேண் டாம் என கைகளை உயர்த்

## வட - கிழக்கு இணைப்பு விவகாரம்

## கட்சிப் பிரதிநிதிகளை தனித்தனி சந்திப்பு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு வின் தலைவர் மங்கள மூன சிங்க வடக்கு-கிழக்கு இணைப் புப் பற்றி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தவுள்ளாரென தெரிய வருகிறது.

இப்பேச்சு வார்த்தைகளை இம்மாதம் 14ஆம் திகதி பூர ணப்படுத்துவார் எனவும் தெரியவருகிறது.

## திறந்த பல்கலை மாணவர் மகாபொல பெறுவர்

முதல் தடவையாக திறந்த பல்கலைக்கழக மாணவர்கட்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளதாய் தெரிய வருகிறது.

400 புலமைப் பரிசில்கள் திறந்த பல்கலைக்கழக மாண வர்கட்கு வழங்கப்படஉள்ளன விஞ்ஞானம், சட்டம், பொறி யியல், சமூகவிஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும் பும் சிறந்த கல்வித் தராதரங் களை உடைய உதவிதேவைப் படும் மாணவர்கட்கு புலமைப் பரிசில்களை வழங்க திறந்த பல்கலைக்கழகம் முன்வந்துள் ளது.

## புனர்வாழ்வு நிதியில் 15 இலட்சம் ரூபா மோசடி

அம்பாறை மாவட்டத்தில் புனர்வாழ்வுக்கென ஒதுக்கப் பட்ட பணத்தில் மோசடி செய்யப்பட்டு உள்ளதாய் தெரியவருகிறது.

15 இலட்சம் ரூபா மோ... பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஒருவரை அம்பாறை நீதிவான் விளக்க

## கண்காட்சி

விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு, தென் தமிழீழப் படுகொலைகள் பற்றிய கண்காட்சி ஒன்று இம்மாதம் 10ஆம் 11ஆ திக திகளில் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை இடம் பெறவுள்ளன.

விடுதலை புலிகள் மாணவர் அமைப்பின் ஆதரவில் நடை பெறும் இக்கண்காட்சியில் இடம் பெறும் ஓவியங்கள் தென் தமிழீழ மக்களுக்கு அட் டூழியப் படைகளால் இழைக் கப்பட்ட இன்னல்களை, உண்மை நிகழ்வுகளை எடுத்தி யம்பும் உயர் ஓவியங்களாகும்.

வல்வெட்டித்துறைப் பகுதிக்கான தமிழீழக் காவல்துறைப் பணி மனையினை நேற்று முன்தினம் கடற்புலி களின் தளபதி தி. கங்கை அமரன் திற ந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

# திறந்த பல்கலை மாணவர்
# மகாபொல பெறுவர்

முதல் தடவையாக திறந்த பல்கலைக்கழக மாணவர்கட்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளதாய் தெரிய வருகிறது.

400 புலமைப் பரிசில்கள் திறந்த பல்கலைக்கழக மாணவர்கட்கு வழங்கப்படஉள்ளன விஞ்ஞானம், சட்டம், பொறியியல், சமூகவிஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் சிறந்த கல்வித் தராதரங்களை உடைய உதவிதேவைப் படும் மாணவர்கட்கு புலமைப் பரிசில்களை வழங்க திறந்த பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது.

## புனர்வாழ்வு நிதியில் 15 இலட்சம் ரூபா மோசடி

அம்பாறை மாவட்டத்தில் புனர்வாழ்வுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் மோசடி செய்யப்பட்டு உள்ளதாய் தெரியவருகிறது.

15 இலட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஒருவரை அம்பாறை நீதிவான் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தர விட்டுள்ளார்.

வருவதாவது, ...

இறங்குதுறையிலிருந்து நேற்று அதிகாலை 2-30 மணியளவில் கிளாலி நோக்கி புறப்பட்டு வந்த இரு படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இப்படகுகளில் ஒன்றில் இரண்டு படகோட்டிகள் உட்பட ஒன்பது பேர் இருந்ததாகவும் மற்றைய படகில் பொருள்களுடன் இரு படகோட்டிகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதிகாலை 3-00 மணியளவில் இப்படகுகள் ஆலங்கேணி சூரமுனை கடற்பரப்பில்வந்து கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த சிறிலங்கா கடற்படைப் படகுகள் இவற்றின்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டன.

இத்தாக்குதலால் படகிலிருந்த ஒரு சிறுவன் இருசப்படுகிறது. படகோட்டிகள் இருவரும் கடலில் பாய்ந்து நீந்தி கரைவந்து சேர்ந்தனர்

பொருள்களை ஏற்றிவந்த படகில் இருந்த ஓட்டிகள் இருவரும் கடலில் பாய்ந்ததாகவும், ஆனால் அவர்களின் நிலைபற்றி எதுவும் தெரிய ...

இவ்விரு படகுகளையும் கைப்பற்றிய கடற்படையினர், இறந்தவர்களின் சடலங்கள், பொருள்கள் என்பவற்றுடன் அவற்றை ஆனையிறவு முகாமிற்கு இழுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



வல் வெட்டித்துறைப் பகுதிக்கான தமிழீழக் காவல்துறைப் பணிமனையினை நேற்று முன்தினம் கடற்புலிகளின் தளபதி தி. கங்கை அமரன் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

# சடலங்களின் மறைவில் கிடந்து கடலில் பாய்ந்து தப்பினேன்
## -படகோட்டி தகவல்

(நமது நிருபர்)

சடலங்களுக்கும், பாய்க்கும் இடையில் இறந்தவர்போல் நடித்துவிட்டுப் படகிலிருந்து பாய்ந்து தப்பிவந்தேன் என நேற்று கிளாலி கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இருந்து மயிரிழையில் தப்பி வந்தபடகோட்டியான சுப்பிரமணியம் மகேந்திரன் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் பற்றி அவர் மேலும் விளக்குகையில், அதிகாலை 2 .30 மணியளவில் நானும், எனது சகோதரரான ஜெயேந்திரனும்படகில் நல்லூர் ஆலங்கேணி பகுதியிலிருந்து கிளாலி நோக்கிப் புறப்பட்டோம். இப்படகில் எங்களுடன் ஒரு சிறுவன், இருபெண்கள், மற்றும் ஒரு வயோதிபர் உட்பட நான்கு ஆண்களும் வந்தனர்.

சுமார் முப்பது நிமிடம்வரை ஓடி நாங்கள் சூரமுனைக்கடற்பரப்பில் வந்துகொண்டிருந்த போது தேடுதல் வெளிச்சம் பாய்ச்சியவாறு பீரங்கிப்படகு ஒன்று மிகவேகமாக எம்மை நெருங்கிவந்துகொண்டிருந்தது அது சிறிலங்காவின் கடற்படைப் பீரங்கிப்படகு என்பதை உணர்ந்துகொண்ட நாங்கள், எமது படகை வேகமாக ஓட்ட முற்பட்டபோது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதன்போது எனது சகோதரரும் மற்றொரு பயணியும் கடலில் குதித்து படகின் அணியத்தைப் பிடித்துக்கொண்டனர். நான் பாய்க்குள் பதுங்கி விட்டேன். ஏனையோர் ஐயோ ஐயோ எங்களைச்சுடவேண்டாம் என கைகளை உயர்த்தியவாறு கதறினார்கள். இதன்போது எமது படகை நெருங்கி வந்த படையினர் படகினைப் பார்வையிட்டபின் சிங்களத்தில் ஏதோ பேசியவாறு படகிற்குள் இருந்தவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் சிலவினா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ‘குமணை’ விரைவில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மேலும் ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை தற்பொழுது சொழு புத்துறை

( 6 ஆம பக்கம் பார்க்க )

# டாக்டர் ராம்தாஸ் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் பண்ருட்டி ராமச்சந்திரன், தமிழ் தேசியக்கட்சித் தலைவர் ப. நெடுமாறன் உட்பட 16 பேர்மீது தமிழக பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு தேசத்துரோக சதிச்செயல் குற்றத்தைச் சுமத்தியுள்ளது.

தமிழக பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு தனது குற்றப் புலனாய்வு முதலாவது அறிக்கையில் இக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. தேசத்துரோக சதிச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என தமிழக குற்றப் புலனாய்வுப் பிரிவினால் குற்றம் சாட்டப்பட்டோருள் கடல் தனசேகரம் தியாகராஜன், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, பாஸ்கரன், முத்துக்குமாரசுவாமி, முன்னாள் சட்டசபை உறுப்பினர் பாப்பா சுப்பிரமணியம், தமிழ்த் தேசிய பொது உடைமைக் கட்சியைச் சேர்ந்த சுப வீரபாண்டிய வீரன் ஆகியோரும் அடங்குவர்.

### யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில்
# கப்டன் வேங்கைமாறன் அஞ்சலி நிகழ்வு

மன்னார் மாவட்டம் ஓமந்தையிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் வேங்கைமாறனின் (ஞானசேகர் - சீமான் சூசை லிபேரநுல்எற்றிசிங்) நினைவஞ்சலி நிகழ்வொன்று இன்று காலை 9.00 மணிக்கு யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கப்டன் வேங்கைமாறன் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி பகுதிநேர இலத்திரனியல் தொழில்துறை மாணவன் ஆவார்.


## ஈழநாதம் இதழின் விளம்பரப் பணிமனை

சாவகச்சேரி நகரின் மத்தியில்

உங்கள் அபிமானத்தைப் பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை இயங்கி வருகிறது.

தொடர்புகளுக்கு:

**திருக்கணித அச்சகம்**
கச்சாய் வீதி,
சாவகச்சேரி


### தமிழர் ஆசிரியர் சங்கம்
# செயலாளர் இடமாற்றம் தொழிற் சங்கம் கண்டனம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் க. மகாசிவம் இடமாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக அச் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது

இந்த இடமாற்றம் ஸ்தாபனக் கோவை 25 பந்தி 7க்கு முரணானது என்றும். அடிப்படைத் தொழிற் சங்க உரிமைகளை மீறுவது என்றும் யாழ் கல்விப் பணிப்பாளருக்கு சங்கத்தின் பொதுச் செயலாளர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

### இலங்கையில்
# மனநோய் மருத்துவருக்கு பெரும் தட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் மனநோய் மருத்துவ முறையில் பயிற்சி பெற்ற வைத்தியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு இருந்து வருகிறது.

லிவர்பூல் பல்கலைக்கழகத்தின் மனநோய் மருத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் மைக்கேல் போக் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்புக்கு விஜயம் செய்திருக்கும் இவர், இலங்கையில் மனநோய் மருத்துவம் பற்றிய சட்டம் புதிப்பிக்கப்படவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப மேற்கு நாடுகள் முயற்சி

அம்பாறை. மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் அடிக்கடி விஜயங்களை மேற்கொண்டு அங்கு நிலவும் நிலைமைகளை அவதானித்து வருவதாகவும் இவர்களது விஜயங்கள் தத்தமது நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்திருப்பவர்களை மீளத் திருப்பி அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற் கட்டமாக சுவீடன். கனடா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளவர்களை இலங்கைக்கு அனுப்பி இங்கு அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரியவருகிறது.

அம்பாறை மட்டக்களப்பு. திருமலை வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதிகள் அனைவரும் அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னால் கொழும்பில் உள்ள அகதிகள் அனுப்பி வைக்கப்பட உள்ளனர் எனவும்,

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து வந்த அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட பின்னரே ஏனைய நாடுகளில் உள்ள அகதிகள் வரவழைக்கப்பட உள்ளதாகவும் இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

### தமிழ் நாட்டில்
# “புலிகளின் காலம்” புத்தகம் வெளியிட்டவர் கைது

[சென்னை]

“புலிகளின் காலம்” என்ற புத்தகத்தை வெளியிட்டமைக்காக ராஜு என அழைக்கப்படும் ராஜகோபால் என்பவரை தமிழநாடு பொலிசார் கைது செய்துள்ளனர். தமிழ் நாடு விருத்தாசலம் பொலிசார் இவரை கடந்த சனியன்று கைது செய்த தாகத் தெரியவருகிறது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மத்திய மாநில அரசுகள் மீது இடைக்கால தடை உத்தரவு
## பாட்டாளி மக்கள் கட்சி மனு

பாட்டாளி மக்கள் கட்சியை தடை செய்வது மற்றும் கட்சியின் உறுப்பினர்களைக் கைது செய்வது ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று கோரும் இரண்டு மனுக்களை பாட்டாளி மக்கள் கட்சி சென்னை மேல் நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ளது

இம்மனுக்களை கடந்த29-ம் திகதி ஏற்றுக்கொண்ட நீதி

( 6 ஆம் பக்கம் பார்க்க )


**மாசை, தூசை சேரவிட்டால் நாசம் முழுவதும் எங்களுக்கே**

## வரி விளம்பரம்

**உடன் விற்பனைக்கு உண்டு**
**HIGH LINE PRIMA, BHIRA**

கைலைன் வெள்ளை, சறுட்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (3325)

**கடிகாரமா? றேடியோவா?**

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவர்ச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

**துரித மீட்டற் பயிற்சி (ஆண்டு 5, 4)**

வெளிவந்து விட்டது! பிரபல பாடசாலை ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கும், ஆண்டு5 புலமைப் பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியை (விடைகளுடன்) புதிய கல்வி நிலையத்திலும், யாழ் நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் (3327)

**நீமியா உரம்**

அடிக்கட்டுஉரம்கரைந்தோ, நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது நீமியா உரம். பயிர் வளர்ச்சி விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள் வட்டுக்கோட்டை சந்தி அப்பையா ஸ்ரோஸிலும் கிடைக்கிறது - மில்க்வைற் (சி/5184)

**ஆண்டு 5 புலமைப்பரிசில்**

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவச மாசத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும் Bond Institute, 582 Stanley Road Jaffna. (சி 5169)

# சமூகத்தில் விழிப்புலனிழந்தோருக்கும் சமசந்தர்ப்பம் வழங்க வேண்டும்

**- வெள்ளைப்பிரம்பு தினச்செய்தி**

விழிப்புலனிழந்தோர் சமுதாயத்தில் ஓர் இரண்டாந் தரப்பிரஜையாக வாழ்வதை என்றும் விரும்புவதில்லை பயனுள்ள ஒரு முயற்சியை மேற்கொண்டு தாமும் வெற்றிகரமாக வாழ்க்கையில் ஈடுபடுவதோடு தமது சமூகத்திற்கும் நாட்டுக்கும் தமது பங்களிப்பை நல்குவதே அவர்களது இலட்சியமாகும்.

இவ்வாறு யாழ் விழிப்புலனிழந்தோர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் ராஜா எஸ் வேலு தேவர் இவ்வாண்டு வெள்ளைப்பிரம்பு தினத்தை ஒட்டி வெளியிட்ட விசேட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

அச்செய்தியில் அவர்மேலும் குறிப்பிடுகையில் வேகமாக மாறிவரும் சமுதாயத்தில் விழிப்புலனிழந்தோர்க்கும் கூடுதலான வேலை வாய்ப்பை அளித்தும், பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிற்சி நிலையங்களிலும் சந்தர்ப்பம் அளித்தும் தங்கள் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வேண்டும் என்று கோரியுள்ளார்.

அத்துடன் வெள்ளைப் பிரம்பு ஒன்றுதான் விழிப்புலனிழந்தோரை பாதுகாக்கும் சின்னம் வீதிகளில் அவர்கள் நடமாட உதவும் சின்னம் என்றும் கூறியுள்ளார்

## பாட்டாளி ம.கட்சிமீது தடை; இந்தியகம்யூனிஸ்ட் எதிர்ப்பு

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்ததாகக் கூறி பாட்டாளி மக்கள்கட்சியைத் தடைசெய்ய வேண்டுமென தமிழகமுதல்வர் ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்துள்ளது.

அக்கட்சி தவறு செய்திருப்பின் மக்கள் அதனைப் புறக்கணிப்பர் எனவும், அக்கட்சியைத் தடைசெய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது-

## செய்வதாகச்

ஐந்தாம் வகுப்பு வரைதான் படிக்கலாம். அதன் பிறகு சாதாரண அரச பாடசாலைகள் அல்லது தனியார் பாடசாலைகளை நாடவேண்டும். முன்பெல்லாம் பிரெய்ல் பாடமுறையில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியை செல்வி சின்னத்தம்பி, நாம் படிக்கும்பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடங்கள் சார்ந்த எல்லா அம்சங்களிலும் எமக்கு உதவியாக இருந்தார் பிரெய்ல் முறையில் துறைபோன முதல் தமிழரும் கடைசித் தமிழரும் இவர்தான் இவர் கடமையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அவருக்குப் பிறகு எமக்கிருந்த சிறப்புச் சூழல் இப்போது இல்லை. இப்போது கல்விப் பணிப்பாளராக இருக்கும் திரு. சுந்தரலிங்கம் முன்னர் யாழ்ப்பாணத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்தபோது எமது கல்வியியல் பிரச்சினைகளை அவரிடம்கூறி நிவாரணம் கோரினோம் இப்போதும் அவரிடம் பேசியுள்ளோம்இடைப்பட்டகாலத்தில் கல்விப்பணிப்பாளர்களாக இருந்த ஜனாப் எம். எம். மன்சூர் செல்வி பெரியதம்பி ஆகியவர்களிடம் எமது கஷ்டங்களை வெளிப்படுத்தினோம். இரக்கமான மனப்பான்மையுடன் கேட்டு ஆவன செய்வதாகச் சொல்கிறார்கள் காரியத்தில் ஏதாவது நடக்கிறதா என்றால் பூச்சியம்தான் எதுவும் காரிய சாத்தியமாவதில்லை.

★ இந்தியாவில் எல்லாம் வாசிப்போர் சங்கம் (READERS Club) ஏராளம். பல்கலைக் கழகங்களில் கல்விகற்...

...பாடு படவேண்டியிருந்தது. சகபாடிகள்மனிதநேயத்துடன் உதவினார்கள். ஆனால், இந்தியாவில் இருப்பது போன்ற வாசிப்போர் சங்கங்கள்யாழ்ப்பாணத்தில்இல்லாதது பெரும் குறை. சில அமைப்புக்கள் ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டது போல் பிரம்மையை உண்டுபண்ணி விடுகின்றன. மனிதநேய ஸ்தாபனங்களும் காத்திரமான பங்களிப்பு எதுவும் செய்வதில்லை. ஏதோ பெயருக்கு உதவுகிறார்கள் அல்லது பெயரளவில் உதவுகிறார்கள். மீனை உணவுக்குத் தருவதைவிட மீனைப் பிடிக்கும் வழியைக் கற்றுத்தந்தால் போதும்.

**தொழில் வாய்ப்பு**

★ சமுதாயத்துக்கு நிரந்தரமான பங்களிப்பை விழிப்புலனற்றவர்களாகிய நாங்களும் செய்ய விரும்புகிறோம். இது ஒரு புறமிருக்க, தொழில் கொடுக்கலாமா? தொழிலை வழங்கினால் விழிப்புலனற்றோர் செய்வார்களா? இப்படிப் பலர்கேட்கிறார்கள் இந்த நாட்களிலும் இப்படிப்பட்ட மனப்பான்மையுடன் இருக்கிறார்களே என்பது பெரும் ஆச்சரியம்.அண்மையில் விழிப்புலனற்றவர் ஒருவர் சிறிலங்கா நிர்வாக சேவைப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்தார் அவருக்கு தொழில் தர நிர்வாகம் தயங்கியது பல வழிகளில் முயற்சித்த போது தான் வெற்றி கிட்டியது அடுத்தபடிஇவர் பி.ஏ.பட்டப் படிப்பிலும் இரண்டாவது உயர் பிரிவில் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்குது.

## ஆனைக்கோட்டை யூனியன் கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் அற்றோர்பாடசாலை பழைய மாணவர்கள் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் ஆனைகோட்டை யூனியன் கழகம் சாம்பியன்கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

ஆனைக்கோட்டை யூனியன் கழகத்துக்கும் அளவெட்டி விளையாட்டுக் கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற சாம்பியன் மோதலில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் கழகம் 20 ஓவர்களில் 49 ஓட்டங்களைப் பெற்றது. அளவெட்டிக்கழகம் 13 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றிபெற்றகழகத்துக்கும் வீரர்களுக்கும் டாக்டர் ஜெயகுலராஜா பரிசில்களை வழங்கினார். (42)

## கொள்ளையிலீடுபட்டு வந்த சிப்பாய் சுட்டுக் கொலை

பல கொள்ளை, கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த முன்னாள் சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று ஜிந்தோட்டையில் நடைபெற்றுள்ளது.

சுந்தவாரம் பஸ் நிலையம் அருகில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட கமாண்டோ மெண்டிஸ் என அழைக்கப்படும் இந்நபர் பொலிசாரால் தீவிரமாக தேடப்பட்டவராவார். சிகரட் வான்கொள்ளை, வீட்டுக்கொள்ளை, தங்கநகைகள் கொள்ளை, மீட்டியாகொடை பகுதி கொலை, மற்றும் கடந்த பெப்ரவரி மாதம் பெந்தொட்டை பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் சோமரட்ண கொலை தொடர்பாகவே இவர் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்தவராவார்

**பனம்விதை நடுகை**

கிளிநொச்சியின் சாந்திபுரம் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் எதிர் வரும் மாவீரர் தினத்தையொட்டி பனம் விதைகள் நாட்டவுள்ளது

சுமார் 50 ஏக்கர்களில் 25000 பனை விதைகள், நடுகை செய்யப்படும் இதற்கு தேவையான விதைகள் கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக விதை ஒன்று 50 சதவீதம் கொள்வனவு செய்கின்றனர்.

## ஈழத்

...பட்டும், தேநீர்க்கடைப் பிரவேசம், சம பந்தி போசனம் போன்றவற்றில் ஈடுபட்டும் வந்ததை உள்வயத் தேசிய ஒருமைப்பாட்டுக்கான ஒரு நடவடிக்கையாக ஒருபோதும் கொள்ளமுடியாது. இது வாக்குக்களை பெறுவதற்கான நரித்தனமான பாசாங்கு

எதிரி இக்கூட்டணியினரைப் பாராளுமன்றத்திற்கு வர வேண்டாமென 6ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் தடுத்தான் தெற்கில் தொடர்ந்து வெடித்த இனக் கொலைக் கலவரங்கள் இவர்களது தென்னிலங்கை இருப்பியத்திற்கான முக்கிய முன் நிபந்தனை உருப்பெற்றதெனலாம். ஆயினும் ஈழத்தமிழரின் உள்வயத் தேசிய கட்டுமானங்கள் பெரிதும் வளர்க்கப்பட வேண்டியவைகளாகவே உள்ளன

''இவ்வளவு குண்டு போட்டும் எங்கட சனம் இன்னும் திருந்தேல்லை'' என்று இரு வழிப்போக்கர் கதைத்துக் கொண்டு போன அந்த வாக்கியமே இக்கட்டுரை எழுத என்னைத் தூண்டியது. இந்த வழிப்போக்காரது வார்த்தையின் பின்னணி என்னவென்று எனக்குத் தெரியாது. அது சில வேளை மிச்சாரணமாக...


**தேவை**

**தமிழ் தட்டச்சு இயந்திரம்**

புதிய அல்லது நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் கீழ்க் கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

மணியம்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(3331)


**2-ம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு:- 15.05.1917

உதிர்வு:- 02.10.1990

**அம்பலவாணர் ஆறுமுகம்**

திதி:- 09-10-1992

ஈராண்டு சென்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் பிரியாதவை

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''சிவகிரி''
கரந்தன் சந்தி,
நீர்வேலி.

(3326)

**நினைவு கூருகின்றோம்...**
**1992-10-09**

1988-ம் ஆண்டு இதேதினத்தில் கைதடி - வண்ணாத்திப் பாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய- கைதடிப்பிரதேசப் பொறுப்பாளர்-

2-ம் லெப். சிவா (குப்புசாமி சிவசிறிதரன் கைதடி, சாவகச்சேரி-யாழ் )

காது பாதுகாக்கிறது நீமியா உரம். பயிர் வளர்ச்சி விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள் வட்டுக்கோட்டை சந்தி அப்பையா ஸ்ரோஸிலும் கிடைக்கிறது - மில்க்வைற் (சி/5184)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவச மாசத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும் Bond Institute, 582 Stanley Road Jaffna.

(சி 5169)

### விற்பனையாகின்றன

இலகு ஆங்கிலம் (English Made Eassy) ஆண்டு 4, 5, 6 ரூ. 19-50 இலகு தமிழ் இலக்கணம் ரூ 12-50 தமிழ்த்தென்றல் யாதுமூரானின் கவிதைகள் ரூ 20.00 எல்லாப் புத்தக கடைகளிலும் கிடைக்கும். பொற்கமலதேவி பதிப்பகம்.

(3305)

### மரக்கன்றுகள்

மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்குகிறோம் இச்செயற்திட்டத்திற்கு அவசியமான வெற்றுப் பால்மா பக்கற்றுகள் மற்றும் மில்க்வைற் மேலுறைகள் மாற்றாகத் தந்து மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளவும். உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள்.

'மில்க்வைற்' சி 5190

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைச் சந்தியில் நேற்று முன் தினம் நடைபெற்ற வீதிவிபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்

தமிழ்ச்செல்வன் (வயது 27 இருபாலை தெற்கு கோப்பாய்) என்பவரே இவ் விபத்தில் படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## விஞ்ஞானப் பொருட்காட்சி

இன்று (09-10-1992) யாழ் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞானப் பொருட்காட்சி கல்லூரியில் காலை 9மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இருதினங்கள் நடைபெற இருக்கும் இப்பொருட்காட்சி காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

பணிப்பாளராக இருக்கும் திரு. சுந்தரலிங்கம் முன்னர் யாழ்ப்பாணத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்தபோது எமது கல்வியியல் பிரச்சினைகளை அவரிடம்கூறி நிவாரணம் கோரினோம் இப்போதும் அவரிடம் பேசியுள்ளோம்இடைப் பட்டகாலத்தில் கல்விப்பணிப்பாளர்களாக இருந்த ஜனாப் எம். எம். மன்சூர் செல்வி பெரியதம்பி ஆகியவர்களிடம் எமது கஷ்டங்களை வெளிப்படுத்தினோம். இரக்கமான மனப்பான்மையுடன் கேட்டு ஆவன செய்வதாகச் சொல்கிறார்கள் காரியத்தில் ஏதாவது நடக்கிறதா என்றால் பூச்சியம்தான் எதுவும் காரிய சாத்தியமாவதில்லை.

★ இந்தியாவில் எல்லாம் வாசிப்போர் சங்கம் (READERS Club) ஏராளம். பல்கலைக் கழகங்களில் கல்விகற்கும்விழிப்புலனற்றோர்களுக்கு அவர்கள் முன் ஏற்பாட்டின் படி நூல்களை இலவசமாக வாசித்துக் காட்டுகிறார்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் படித்த காலத்தில் புத்தகங்களைப்படித்துக் குறிப்பெடுத்துக் கொள்ள நான் பெரும்மான பங்களிப்பை விழிப்புலனற்றவர்களாகிய நாங்களும் செய்ய விரும்புகிறோம். இது ஒரு புறமிருக்க, தொழில் கொடுக்கலாமா? தொழிலை வழங்கினால் விழிப்புலனற்றோர் செய்வார்களா? இப்படிப் பலர்கேட்கிறார்கள் இந்த நாட்களிலும் இப்படிப்பட்ட மனப்பான்மையுடன் இருக்கிறார்களே என்பது பெரும் ஆச்சரியம். அண்மையில் விழிப்புலனற்றவர் ஒருவர் சிறிலங்கா நிர்வாக சேவைப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்தார் அவருக்கு தொழில் தர நிர்வாகம் தயங்கியது பல வழிகளில் முயற்சித்த போது தான் வெற்றி கிட்டியது அடுத்தபடிஇவர் பி ஏ.பட்டப் படிப்பிலும் இரண்டாவது உயர் பிரிவில் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் விடைபெறும் போது இரவீந்திரன், விழிப்புலனற்றவர்கள் தொழில் பயிற்சி, ஆலோசனை, வழிகாட்டுதல்களுக்கு கைதடியிலுள்ள எமது விழிப்புலனற்றோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## விழுதுகள்

நிற்க இவளோ எதிரியின் பக்கத்தில் நின்று கொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டாள். விடுதலைக்காக அவள் எதையும் செய்யத் தயாராய் இருந்தாள்.

ஒருமுறை வேவு பார்க்க போனவள் திடீரென்று வோக்கியில் அறிவிக்கிறாள் ''ஆர்.பி ஜி யோடை உடனே வாங்கோ'' என்றுமறுசணம் ''வேண்டாம் நானே நேரில் வருகிறேன்'' என்று அறிவித்தாள்

எங்களுக்கு விளங்கவில்லை

நேரில் வந்தபோதுதேனுஜா சொன்னாள். ''அக்காஎங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத்திரியிறதைப்பார்த்தவுடன் எனக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டன் பிறகுதான் நான்போன வேலையை யோசிச்சன் எனது தவறு விளங்கிச்சு. அதுதான் அப்படி அறிவிச்சனான்'' என்றாள்.

எதிரியைக் கண்ணால் கண்டும் அவன் குசாலாகத் திரிவதைக் கண்டும் இவள்ஏன் தன்னை அடக்கிக் கொண்டாள்.

எங்கள் மண்ணினில் எதிரியின் பாதப்பதிவுகூட இருக்கக்கூடாது என்பதற்காகநிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவள் இந்தவேங்கை. இதனால்தான் அவள் தனது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

இன்னொரு நாள் வேவு பார்க்கப் போனவள் வந்து சொன்னாள் ''அக்கா அந்தப் பொயின்ரிலை இரண்டு டொங்கான் இருக்கு எப்படியும்நான் தான் அதை அடித்து எடுப்பன் இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டைக்கொடுத்து எங்களுக்கு M203( எம் 203) ஒன்று வாங்குவன்'' என்றாள்.

எத்தனையோ ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்திற் தேக்கி எங்கள் தேனுஜா செயற்பட்டாள் சண்டை தொடங்கிய நாளில் இருந்து தன்னைப்பற்றி அவள் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாகக் குளிக்கக்கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக்கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. ''எப்படியும் இவங்களைஅடிச்சுத்துரத்திப்போட்டுத்தான் நான் குளிப்பன்'' என்று கூறிக் கொண்டே வேகங் கொண்டெழுந்தாள்,

தமிழீழத்தாகத்தைமட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த எங்கள் தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள் எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்துவிட்டுஇவள் எமக்கு வழிகாட்டிச் சென்று விட்டாள்,

ஈழக்கனவினைச் சுமந்தவள் நினைவுகள் இன்று எங்கள் இதயங்களை ஆக்கிரமித்துள்ளது. அவள் பாதச்சுவடுகளில் எங்கள் பாதச்சுவடுகளை இன்னும் ஆழமாகப்பதிக்கிறோம்.

விடியலைக் காணும்வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

-புதியவள்

(நன்றி: சுதந்திரப் பறவைகள்)

மற்றும் கடந்த பெப்ரவரி மாதம் பெந்தொட்டை பொலிஸ் நிலைய கான்ஸ்டஊடாக விதை ஒன்று 50 சதவீதம் கொள்வனவு செய்கின்றனர்.

## ஈழத்

பட்டும், தேநீர்க்கடைப் பிரவேசம், சம பந்தி போசனம் போன்றவற்றில் ஈடுபட்டும் வந்ததை உள்வயத் தேசிய ஒருமைப்பாட்டுக்கான ஒரு நடவடிக்கையாக ஒருபோதும் கொள்ளமுடியாது. இது வாக்குக்களை பெறுவதற்கான நரித்தனமான புசாங்கு

எதிரி இக்கூட்டணியினரைப் பாராளுமன்றத்திற்கு வர வேண்டாமென 6ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் தடுத்தான் தெற்கில் தொடர்ந்து வெடித்த இனக்கொலைக் கலவரங்கள் இவர்களது தென்னிலங்கை இருப்பையும் ஆட்டங்காணச் செய்தது கூட்டணித் தலைமை செயலற்றதாகியது. அது கொழும்பிற்குப் பதிலாய் இந்தியாவில் தனது கால்களைப் பதித்தது. இப்பின்னணியில் இளைஞர் இயக்கங்கள் தமிழ் மண்ணில் வளர்ந்தன இவ்வியக்கங்கள் எதுவாயினும் சரி அவைகள் ஆரம்பத்தில் தமிழ் மண்ணில் உருப்பெற்றன. காலகதியில் சில இயக்கங்கள் தமிழ் மண்ணை மறந்தன எவ்வாறாயினும் கொழும்புத் தலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. குறிப்பாக விடுதலைப்புலிகள் தமிழ் மண்ணைத் தமது களமாக்கிக்கொண்டனர் ஈரோஸ் இயக்கத்தின் ஒரு பகுதியினரும் இவ்வாறாயினர்.

ஒருவகையில் ஈழத்தமிழ் மண்ணில் இருந்து தமிழ்த் தலைமை என்பது 1980களில் படிப்படியாக உருபெறலாயிற்று, இதனால் தமிழ்தேசியத்திற்கான முக்கிய முன் நிபந்தனை உருப்பெற்றதெனலாம். ஆயினும் ஈழத்தமிழரின் உள்வயத் தேசிய கட்டுமானங்கள் பெரிதும் வளர்க்கப்பட வேண்டியவைகளாகவே உள்ளன

''இவ்வளவு குண்டு போட்டும் எங்கட சனம் இன்னும் திருந்தேல்லை'' என்று இரு வழிப்போக்கர் கதைத்துக் கொண்டு போன அந்த வாக்கியமே இக்கட்டுரை எழுத என்னைத் தூண்டியது. இந்த வழிப்போக்காது வார்த்தையின் பின்னணி என்னவென்று எனக்குத் தெரியாது. அது சிலவேளை மிகச்சாதாரணமாக யாராவதுமனிதர்களின் தனிப்பட்ட ஏதாவது ஒரு பண்பற்ற நடவடிக்கையின் தாக்கமாக இருக்கலாமோ என்னவோ. ஆனால் அவ்வார்த்தைகளே என்னை இக்கட்டுரை எழுத தூண்டின.

சுப்பசொனிக் குண்டுவீச்சு விமானங்களின் குண்டுவீச்சுக்களின் பின்பும்கூட தமிழ் மக்கள் மத்தியிலுள்ள பல்வேறு மனக்குகைகள் இன்னும் தகரவில்லை. இந்தப் பெரும் இரத்த ஆறுகூட உறைந்து போயிருக்க அத்தகைய மனிதர்களின் மனங்களை இன்னும் இளகவைக்கவில்லை. தேசிய வ தத்திலுள்ள உன்னதங்களை அடைய கலை இலக்கியப் படைப்புக்களும் அறிவியல் ஆக்கங்களும் அரும்பாடுபட்டால்தான் ஓரளவு முடியும். நெருக்கடி நிறைந்த காலகட்டங்களில்தான் பண்பாட்டு மாற்றம் ஏற்படுவதற்குரிய புறவயச் சூழல் நிலவும்.

## எடிசன் அக்கடமி

[யாழ் இந்துக்கல்லூரி அருகில்]

411/1, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

**O/L 92 DEC.**

### கணிதம்

துரித 2 மாத மீட்டல்

பின்வரும் பகுதிகள் பூர்த்தியாக்கப்படும்

- அமைப்பு
- நிகழ்தகவு
- அளவியல்
- திரிகோணகணிதம்
- மடக்கை
- கேத்திரகணிதம்

ஆசிரியர்:

**பாஸ்கரன்**

சனி, ஞாயிறு 2.00மணி — 5.00 மணி வரை

ஆரம்பம் : 10 — 10 - 92 சனி 2.00 மணி

(சி/5171)

ஈராண்டு சென்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் பிரியாதவை

''சிவகிரி''
கரந்தன் சந்தி,
நீர்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3326)

## நினைவு கூருகின்றோம்... 1992-10-09

1988-ம் ஆண்டு இதேதினத்தில் கைதடி - வண்ணாத்திப் பாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கைதடிப்பிரதேசப் பொறுப்பாளர்-

**2-ம் லெப். சிவா** (குப்புசாமி சிவசிறிதரன் கைதடி, சாவகச்சேரி-யாழ்)

மட்டக்களப்பில், இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவன்.

1989-ம் ஆண்டு பளையில் தேச விரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1990-ம் ஆண்டு திருக்கோணமலை - வேப்பங்குளம் 10-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சங்கர்** (நா. மோகனசுந்தரம் - அன்புவழிபுரம் - திருக்கோணமலை)

முல்லைத்தீவில், சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**லோகநாதன்** (கந்தையா பார்த்தீபன் நீலாவணை, கபறணை-)

**கோகிலன்** (பொன்னையா கனகலிங்கம் - பரந்தன்- கிளிநொச்சி;

கடவானையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**ராங்கி** (நடராசா குலேந்திரராசா - 234, 2-ம் படிவம், கந்தளாய்-)

**அஜித்** (கணபதிப்பிள்ளை கருணாகரன் ஈச்சந்தீவு, ஆலங்கேணி - திருக்கோணமலை)

**றொபின்சன்** (கனகசுந்தரம் குகன் - மணற்சேனை- திருக்கோணமலை)

வெல்லாவெளியில், சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**சாவா** (பாலசிங்கம் திருக்குமாரராசா-வன்னேரிக்குளம்)

மணலாறுப்பகுதியில், சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் தரன்** (காராளசிங்கம் ஈஸ்வரன் நெடுங்கேணி மணலாறு)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ்ப்பெண்-

1991-ம் ஆண்டு மணலாறில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து, மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கிரி** (மார்க்கண்டு தேவராசா-கன்னியா- திருக்கோணமலை-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5189)

**14**.7.1992 பௌர்ணமி முழுநிலவு கறுக்காய் வெட்டையில் நிலை கொண்டிருந்த எமது தோழர்களின் இதயங்களிலோ வேதனைப் பெருநெருப்புப்பற்றியிருந்தது.

''தேனுஜா வருவாள்'' என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதித்தபடி காத்திருந்தனர்.

காலை 10.00 மணிபோல் இராணுவத்தின் நிலைகளை வேவு பார்க்கச் சென்றிருந்தாள் தேனுஜா. அவள் போய் ஒரு மணித்தியாலம் தான் கழிந்திருக்கும்... அண்மையில் திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தம் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கி விடுகிறது.

''தேனுஜாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ'' எல்லோர் மனங்களிலும் ஏக்கம்.

''தேனுஜாவைத் தவிர வேறு யாரும் அத்திசையில் செல்லவில்லையே, இப்படித்தானே பலநாட்கள் நடந்தன.

இது இன்னொருபக்க மனம்.

எதிரியின் பதுங்கு குழிகளுக்குள் நின்றுகொண்டே எதிரியைத் தேடுகின்ற லாவகமும் பொறிவைத்து காத்துக்கிடக்கின்ற எதிரியின் கண்களை ஏமாற்றி விட்டுத் தப்பி வருகின்ற திடசித்தமும் தேனுஜாவுடன் கூடப்பிறந்த திறமைகளாயிற்றே.. எப்படியும் எங்கள் தேனுஜா வருவாள். விழிகள் பாதையை இறுகக் கவ்வி இருந்தன இடபடித்தான் அன்றும் ஒரு நாள்

தான் அவதானித்த எதிரியின் நிலைகளைக் காட்டுவதற்காக தளபதிகளைக் கூட்டிச் சென்றிருந்தாள். பாதையில் ஓரிடத்தில் அவர்களை நிறுத்தி வைத்து விட்டு முன்னே சென்று மீண்டும் நிலைமையைப் பார்த்துவர எண்ணினாள் அங்கே

எதிரி ஒருவன் தன்னை உருமறைத்தபடி மரநிழல் ஒன்றில் நின்றிருந்தான்: அவனை எமது தோழர்கள் என நினைத்தவள் ''யார் அண்ணாவா'' என வினாவுகிறாள்

ஒரு கணம்தான்......

நிலைமையைப் புரிந்து கொண்டாள். எதிரியின் துப்பாக்கி இயங்குகிறது. வேவு பார்ப்பதற்காகத் துப்பாக்கியைவைத்து விட்டு கைக்குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடி வந்தாள். ''ஆமியை நான் எங்கடை அண்ணாக்கள் எண்டெல்லே நினைச்சுப் போட்

அவளின் பெற்றோர், சகோதரிகள்...

இவளுக்கு யாரையும் கோபிக்கத் தெரியாது. அதே நேரம் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிப் போகின்ற சுபாவமும் இவளுக்கில்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலை கொண்டிருந்த காலத்திலே துணிந்து மாணவியாக இருந்து கொண்டே தன்னுடைய பங்களிப்பைச் செய்தவள். அக்காலத்




தில் இந்திய இராணுவ வெறித்தனத்திற்கு எதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் மறியற் போராட்டங்கள் எதிலும் தேனுஜாவைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவள், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாக தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவள். எந்த நேரத்திலும் தன் உயிருக்கு இதனால் அழிவு ஏற்பட்டு விடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும்பொழுதே தேனுஜா தெளிவான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன், இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக்கொள்ள முடியாது தோற்றுப் போனான். தேனுஜாவோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர் கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக

முடித்துக் கொண்ட காலத்தில் இருந்து அவள் இல்லாமல் எந்தச் சண்டையும் நடந்தது இல்லை. அவளைச் சண்டைக்கு செல்லவிடாது யாராலும் தடுக்கவும் முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலும் இவள் தனது தனியான முத்திரையை பதிக்காது வரவில்லை.

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி மகளிர் படை எல்லையிட்டு நின்ற போது தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் முகாமைச் சுற்றிச் சுற்றி நடந்தன. இராணுவ நடமாட்டம் அனைத்தையும் ஒன்றும் விடாது அவள் விழிகள் அவதானித்தன. அப்பொழுதும் இராணுவப் பகுதியில் இருந்து கிரனைட், டொங்கான் ஷெல் போன்றவற்றை எடுத்து வந்தாள். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் தேனுஜா காயமடைந்தாள். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கி விடவில்லை. வீறுகொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது யோர்த்திறனைப் பற்றி எப்பொழுதும் எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூருவார்கள் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள போராளிகளுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜாதான். அந்தளவு தூரத்துக்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதற்கட்டமாக சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின்

தேனுஜாவை ஒரு சிறந்த போராளியாக சிறந்த வீராங்கனையாக இந்த உலகுக்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவள் தன்கையிலே காயமடைந்தாள்.

ஆனையிறவுச் சமரின் போதும் இவள் தன்னுடைய முழுத்திறமைகளையும்வெளிக்காட்டியிருந்தாள். எதிரியுடன் நேருக்குநேர் நின்று மோதுவதிலிருந்து களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது, களத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்குத் தேவையான வெடி பொருள்கள் உணவு நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லா முனைகளிலும் பாய்ந்தோடி நின்றாள்.

தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போதும் தேனுஜாவின் பங்களிப்பு மறக்க முடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினாள் இந்தச் சண்டையின்போது அவளது வயிற்றில் பெரிய காயமேற்பட்டது

இவளது ஆற்றலும் அருமையும், வீரமும் துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த விசேடவேவுப்பிரிவை உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. விசேட வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு பகல் பாராது உழைத்தாள்.

எப்படியேனும் மகளிர்படையணி தானே முழுமையான போர்த்திட்டங்களையும் வகுத்துஇராணுவமுகாமொன்றைத்தாக்கி அழிக்கவேண்டுமென்ற இலட்சியக் கனவை இதயத்துட் தேக்கிவைத்தவள் அதனைச் செயலுருவில் கொண்டு வரவேண்டும் என்று துடித்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பலவேகய-2 நடவடிக்கையின்போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்துநின்றனர்.

''நாங்கள் எந்த இடத்துக்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா எப்படி இவவால் இப்படி நடக்கமுடிகிறது? இதுவரை இங்கேயே நின்ற எங்களுக்குக்கூடத் தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக்குத் தெரிந்திருக்கின்றது'' என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம்இயற்கையின்ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில்

# தர்ம தீபமும் தமிழர்தாயகமும்

சிங்கள இனத்தின் பூர்வீக வரலாறு மிகவும் பூடகமானது மகாவம்சத்தின் புராணக் கட்டுக்கதைகளிலிருந்து இந்த வரலாறு ஆரம்பமாகின்றது. மிகவும் வினோதமான அம்புலிமாமா கதைபோல ஒரு சிங்க ராசாவின் விரசமான காதல் விவகாரத்தில் இருந்து சிங்கள இனத்தின் வரலாறு தோற்றம் கொள்கிறது.

பௌத்தபிக்கு ஒருவரின் எழுத்தாணியிலிருந்து ஊற்றெடுத்த ஒரு அலாதியான கற்பனைக்காவியம் விஜயனையும் அவனது தோழர்களையும் ஈழத்தீவில் குடியமர்த்தி விடுகிறது. வடஇந்திய ஆரியமும் அரசகுலத்து இரத்தமும் சிங்கள இனத்தின் பூர்வீகத்தோடு சேர்க்கப்படுகிறது. கற்பனைக் காவியத்தின் கதாநாயகர்கள் வரலாற்று மனிதர்களாக அவதாரம் எடுத்தார்கள். புராணத்துப் பொய்மை மெய்மை ஆக்கப்பட்டு சிங்கள தேசத்தின் வரலாறு திரிக்கப்பட்டது.

சிங்கள பௌத்தம் வரலாற்றுப் புரட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அரசஉருவாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தியது அந்தக்காலத்தில் இருந்தே ஆச்சிரமத்து ஆன்மீக அறநெறிகள் அரண்மனைக்குள் புகுந்து கொண்டன பற்றுக்களைத் துறந்து பரிநிர்வாணம் வேண்டி நின்றகௌதமரின்துறவறத்தத்துவம்அதிகாரப்பற்றுக் கொண்ட அரசியல் உலகில் பிரவேசித்தது அரசர்கள்போதிசத்துவர்களாக மாறினர் ஆசையை கொல்லவேண்டிய ஆன்மீகத் துறவிகள் அரசியல் பிக்குகளாக அதிகாரபீடம் ஏறினர். தர்மசீலம் அதிகார அரசியலுக்குள் புதைந்து போனது காருண்ய மார்க்கம் பேரினவாதமாக பேயுருவம் பெற்றது வாளேந்திய சிங்கத்துடனும் அரச இலையோடும் ஆதி திராவிட இனக்குழு ஓர் அதியுன்னத தேசியமாகத் தன்னைப் பிரகடனப் படுத்தியது.

மனித குலத்தின் உன்னத மக்கள் சமூகமாக யூத இனத்தையும் பூமியில் புனித தேசமாக இஸ்ரேலையும் எபிரேயக் கடவுள் தேர்ந்தெடுத்தார் என்கிறது சியோனிசவாதம். இப்படியானதொரு தீர்க்கதரிசன அற்புதத்தைச் சிங்கள பௌத்தமும் சிருஷ்டித்து விட்டிருக்கிறது இந்தக் கற்பனைக் கருத்துருவாக 'தம்மதீப' கோட்பாடு பிறந்தது.

பௌத்த தர்மத்தைப் பவுத்திரமாகப் பாதுகாக்க ஒரு புனித நாடும், ஒரு புனித இனமும் புத்த பெருமானால் தெரிவுசெய்யப்பட்டதாம் அரசமரத்தின் கீழ் சித்தார்த்த முனிக்கு பிரம்மஞானம் பிறந்த பொழுது இப்படியானதொரு மண்பற்றும் இனப்பற்றும் தோன்றியதாக சிங்கள பௌத்தம் கற்பனை செய்திருக்கிறது. இந்தக் கற்பனை வளத்தில் இலங்கைத்தீவு தர்மத்தின்இருப்பிடமாக, புத்தபெருமானின் திருவருட்பேறுபெற்ற புனித பூமியாக மாற்றப்பட்டது. இப்படியாக ஒரு புராணத்து ஐதிகம் வர

பிரதேச ஒருமைப்பாடு, இறைமை என்பதெல்லாம் சிங்கள இனத்தின் நில ஆதிபத்திய உரிமையை நிலைநாட்டும் கோட்பாடுகளாக அமைந்தன. புத்தரின் புனித பூமியில் ஒற்றையாட்சி என்ற போர்வையில் ஒற்றை இன சர்வாதிகாரம் தலைதூக்கியது.

புனிதநாடு புனிதஇனம் புனிதமதம் என்ற கோஷங்களுடன் வெறிகொண்டு எழுந்த சிங்களப் பேரினவாதம் தமிழர்களை வெறுத்தது. விரோதிகளாகக் கருதியது வேண்டப்படாத அந்நியர்களாக ஒதுக்கியது. இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளாக, நீண்ட வரலாற்றுடனும், நாகரீகத்துடனும் தனித்துவ தேசியமாக தனக்கே உரித்தான தாயக மண்ணில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களை அங்கீகரிக்க மறுத்தது.

தமிழரின் வரலாறு மறுக்கப்பட்டது.
தமிழரின் தாயகம் மறுக்கப்பட்டது.
தமிழரின் தேசியம் மறுக்கப்பட்டது.

புராணத்துப் பொய்களைவரலாற்று உண்மைகளாக விசாரணையின்றி விழுங்கிக் கொண்டதால், தமிழரின் வாழ்வியல் மெய்மையை எற்றுக் கொள்ள சிங்கள இனவாதம் மறுத்தது. இதனால் எழுந்த இனமுரண்பாடு போராக வெடித்தது. புனித பூமி ரணகளமாக மாறியது.

தம்ம தீபம் என்பது வெறும் புராணத்து ஐதீகமாக சிங்களவரின் மனவுலகக் குகைக்குள் வசித்து வரவில்லை. அது ஒரு பூதாகர ஆக்கிரமிப்புச் சக்தியாக ஆயுதம் தரித்து தமிழரின் தாயகத்தை பலாத்காரமாக விழுங்கிவிட பகீரத முயற்சி செய்து வருகிறது.

தமது சொந்த மண்ணில் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது வரலாற்றுத் தாயகத்தில் நிம்மதியாக சுதந்திரமாக கௌரவமாக வாழவேண்டுமென்ற தமிழரின் நியாயமான, நீதியான நிலவுரிமைக் கோரிக்கை கடந்த நாற்பது ஆண்டுகால இடைவெளியில் முறிந்த பேச்சுக்களும் உடைந்த ஒப்பந்தங்களும் முடிவில்லாப் போர்களுமாக இழுபட்டு இன்று ஒரு பெரும் நில ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொண்டு நிற்கிறது.

வரலாற்றுத் திரிப்பால் எழுந்த தம்ம தீப கோட்பாடும் வரலாற்று எதார்த்தத்தில் பிறந்த தமிழர் தாயகக் கோரிக்கையும் இரு தேசிய இனங்கள் மத்தியில் தீர்கக முடியாத பெரும் முரண்பாடாக விரிசலை விழுத்தியிருக்கிறது. இதனால் அரசியல் தீர்வுக்கான இடைவெளி மூடப்பட்டிருக்கிறது.

படைகளைத் திரட்டி, படையெடுப்பு நடத்தி, நிலத்தை பிடித்து, முள்வேலி போட்டு, புனித பூமியை விரிவாக்கம் செய்யும் இராணுவ வாதக் கொள்கையும் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பியக்கத்தால் ஆட்டங் கண்டு வருகிறது.

தமிழர் தாயகத்தை ஏப்பம் விட எண்ணிய சிங்கள பௌத்த பேரினவாதம், என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது.

மத புராணத்து மாயையில் தோன்

...னே சென்று மீண்டும் நிலைமையைப் பார்த்துவர எண்ணினாள் அங்கே

எதிரி ஒருவன் தன்னை உருமறைத்தபடி மரநிழல் ஒன்றில் நின்றிருந்தான்: அவனை எமது தோழர்கள் என நினைத்தவள் ''யார் அண்ணாவா'' என வினாவுகிறாள்

ஒரு சணம்தான்......

நிலைமையைப் புரிந்து கொண்டாள். எதிரியின் துப்பாக்கி இயங்குகிறது. வேவு பார்ப்பதற்காகத் துப்பாக்கியைவைத்து விட்டு கைக்குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடி வந்தாள். ''ஆமியை நான் எங்கடை அண்ணாக்கள் எண்டெல்லே நினைச்சுப் போட்டேன்'' என்று கூறிச்சிரித்த தேனுஜா மீண்டும்வருவாள்.

''எங்கள் தேனுஜாவுக்கு எதுவும்நடக்காது'' எல்லோர் இதயங்களிலும் இதே ஏக்கம். எல்லோர் உதடுகளிலும் இதே உச்சரிப்பு.

''நேரம் நடு நிசியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. எங்கள் தேனுஜாவைஇன்னும் காணோமே''

''அப்ப ஏதாவது நடந்திருக்குமோ''

இதயம் நம்ப மறுத்தது மீண்டும்..

சருகுகள் மிதிபடும் ஓசை, எல்லோர் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு

''தேனுஜா... தேனுஜா...'' வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளையெல்லாம் ஒன்றாக்கி கூப்பிடுகிறோம்.

''தேனுஜா...! நாங்கள் கிட்டத்தான நிற்கிறம். வாங்கோ''

சருகளின் ஓசையில் ஒரு கணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடுபொடியாய் ..

எங்கள் தேனுஜாவை நாங்கள் இழந்து விட்டோம் கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கி கவிழ்ந்தன.

ஆம்! இவளின் இழப்பை யாரும் இன்னும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

''எப்பொழுதும் அன்பு குழைந்த முகத்துடனும் எல்லோருடனும் எந்தவித பேதமும் இன்றிப் பழகுகின்ற மதனி சாகவில்லை'' என்று அவளை நேசித்த அவளின் கிராமத்து மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக் கொள்கிறார்கள்.

இது தான் எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஒவ்வொரு போராளியும் வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கிறார்கள்.

அழ மறந்து போய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூருகின்றனர்

...உயிருக்கு இதனால் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும்பொழுதே தேனுஜா தெளிவான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன், இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக் கொள்ள முடியாது தோற்றுப் போனான். தேனுஜாவோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர் கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித்திரிகின்ற நடையும் எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப் பிணைப்பை அல்லவா ஏற்படுத்தி நிற்கிறது.



கப்டன் தேனுஜா

இவள் காயப்பட்டிருந்த நேரம் 'ஏன்மதனி?இனியாவது வீட்டில் நிற்கலாம்தானே' என்று இவளுடன் பழகியவர்கள் கேட்டநேரம் மட்டும்தான் இவளது முகத்திலே கோபத்தைக் கண்டதாகக் கூறுகின்றார்கள்.

உண்மைதான். இதை இவளுடன் கூட இருந்த ஒவ்வொரு போராளியும் மறக்க மாட்டார்கள்.

தேனுஜா!

இவள் மகளிர் படையணியின் வரலாற்றில் ஒரு புதிய திருப்புமுனை. 1989ஆம்ஆண்டு ஆறாவது பயிற்சி முகாமிலே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவள் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் புதிய முத்திரை பொறித்து நிற்பாள். அருள் 89 எனப்படும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதில் இவள் ஒரு போதும் தோல்வி கண்டது கிடையாது.

தேனுஜா தனது பயிற்சியை...

...லில் தேனுஜா காயமடைந்தாள். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கி விடவில்லை. வீறுகொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது போர்த்திறனைப் பற்றி எப்பொழுதும் எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூருவார்கள் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள போராளிகளுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜாதான். அந்தளவு தூரத்துக்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதற்கட்டமாக சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாகப் பிரதான முகாமைக் கைப்பற்றும்முயற்சி நடைபெற்றது. தேனுஜாவின் குழுவினர் வானில் இருந்து வரும் குண்டு மழையையோ ஷெல் வீச்சையோ பொருட்படுத்தாது பாய்ந்தோடி, முகாமின் ஒரு பகுதிக்குள் நுழைந்து விட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவும் அவள் குழுவினரும் அந்த இடத்தில் நின்றவாறு இராணுவத்தினருக்குத் தரை மார்க்கமாகவோ கடல் மார்க்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தடை செய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாக முகாமினுள் செலுத்தி எதிரியின் வேகத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானிலிருந்து விமான மூலம் ரவைப் பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவநிலைக்கு அண்மையில் விழுந்த ரவைப் பொதிகளில் இரண்டைத் தனியனாக ஊர்ந்து சென்று இழுத்து வந்தாள் தேனுஜா. குழந்தையாக குதூகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலேகண்டால் தேனுஜாதான் என்று யாரும் நம்பமாட்டார்கள் அந்தளவு தூரத்துக்கு சினங்கொண்ட வேங்கையாய் கிளர்ந்தெழுந்து நிற்பாள். 'சிலாபத்துறை முகாமைத் தகர்க்காது பின்வாங்க மாட்டேன்' என்ற அவளது வேகம் வீரச்சாவைத் தழுவும் வரை சிறிதும் தணியவில்லை. 'எப்படியேனும் எதிரியை இம் மண்ணில் இருந்து விரட்டி விட வேண்டும். எம்மண்ணில் புலிக்கொடியை உயரப் பறக்க விடவேண்டும்' என்ற மாறாத இலட்சியக் கனவுடன் தான் தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டாள்.

சிலாபத்துறைத் தாக்குதல்...

...டிருந்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பலவேகய-2 நடவடிக்கையின்போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்துநின்றனர்.

''நாங்கள் எந்த இடத்துக்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா எப்படி இவவால் இப்படி நடக்கமுடிகிறது? இதுவரை இங்கேயே நின்ற எங்களுக்குக்கூடத் தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக்குத் தெரிந்திருக்கின்றது'' என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம்இயற்கையின்ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவளாகிய இவள் இந்தச் சண்டையின்போது எல்லோருக்கும் வழிகாட்டியாக நின்றாள்.

சிட்டுப்போல பறந்துதிரிந்து எதிரியின் அசைவை அவதானித்து நின்றாள் நாம் எல்லோரும் ''எதிரி எங்கே எங்கே''என்று அவன்வரவைதேடி

(2 ஆம் பக்கம் பார்க்க)

...படுத்தியது.

மனித குலத்தின் உன்னத மக்கள் சமூகமாக யூத இனத்தையும் பூமியில் புனித தேசமாக இஸ்ரேலையும் எபிரேயக் கடவுள் தேர்ந் தெடுத்தார் என்கிறது சியோனிசவாதம். இப்படியானதொரு தீர்க்கதரிசன அற்புதத்தைச் சிங்கள பௌத்தமும் சிருஷ்டித்து விட்டிருக்கிறது. இந்தக் கற்பனைக் கருத்துருவாக 'தம்மதீப' கோட்பாடு பிறந்தது.

பௌத்த தர்மத்தைப் பவுத்திரமாகப் பாதுகாக்க ஒரு புனித நாடும், ஒரு புனித இனமும் புத்த பெருமானால் தெரிவுசெய்யப்பட்டதாம் அரசமரத்தின் கீழ் சித்தார்த்த முனிக்கு பிரம்மஞானம் பிறந்த பொழுது இப்படியானதொரு மண்பற்றும் இனப்பற்றும் தோன்றியதாக சிங்கள பௌத்தம் கற்பனை செய்திருக்கிறது. இந்தக் கற்பனை வளத்தில் இலங்கைத்தீவு தர்மத்தின் இருப்பிடமாக, புத்தபெருமானின் திருவருட்பேறுபெற்ற புனித பூமியாக மாற்றப்பட்டது. இப்படியாக ஒரு புராணத்து ஐதிகம் வரலாற்று உண்மையாகத் திரிக்கப்பட்டு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இரத்தமும் சதையுமாக உயிர்வடிவம் பெற்றது

இந்த ஐதீகத்தின் அடிப்படையில் சிங்கள இனம் இலங்கைத்தீவு முழுவதற்கும் சொத்துரிமை கொண்டாடியது. 'தம்மதீபம்' ஒரு இனத்திற்கே உரித்தான உடைமையாக மாறியது. ஐக்கியம்,

...இன்று ஒரு பெரும் நில ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொண்டு நிற்கிறது.

வரலாற்றுத் திரிப்பால் எழுந்த தம்மதீப கோட்பாடும் வரலாற்று எதார்த்தத்தில் பிறந்த தமிழர் தாயகக் கோரிக்கையும் இரு தேசிய இனங்கள் மத்தியில் தீர்க்க முடியாத பெரும் முரண்பாடாக விரிசலை விழுத்தியிருக்கிறது. இதனால் அரசியல் தீர்வுக்கான இடைவெளி மூடப்பட்டிருக்கிறது.

படைகளைத் திரட்டி, படையெடுப்பு நடத்தி, நிலத்தை பிடித்து, முள்வேலி போட்டு, புனித பூமியை விரிவாக்கம் செய்யும் இராணுவ வாதக் கொள்கையும் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பியக்கத்தால் ஆட்டங் கண்டு வருகிறது.

தமிழர் தாயகத்தை ஏப்பம் விட எண்ணிய சிங்கள பௌத்த பேரினவாதம், என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது.

மத புராணத்து மாயையில் தோன்றிய இனவாத வெறியில் இருந்து சிங்கள தேசம் விடுபடாத பட்சத்தில் தமிழர் தாயகம் பிரிந்து சென்று தனி நாடாகத் தனித்து வாழும் வரலாற்று நியதி தவிர்க்க முடியாததாகிவிடும்.

நன்றி: விடுதலைப் புலிகள்

## எப்படிச் சாத்தியமானது?...

தூரத்தே
அசைந்தாடும் பனையிலே
காயும் பழமும்
ஒரே மாதிரியாக
குலைகுலையாகக்
காய்த்துக் கிடக்கின்றன .....

ஓ!
அடுத்த வருடமும்
நிறைகின்றதா
நம்பமுடியவில்லை!
நாற்பது நாளிலேயே
எங்கள் கதை
முடிந்து விடுமென்று
இரவு பகலாய்
ஏங்கி அழுத நாட்கள்!

ஐயோ!
கோதுமையும் இல்லை
சவர்க்காரமும் இல்லை
எல்லாமே தடையாமே
இனி
உயிர் வாழ்வது
நிச்சயமில்லை
என்று கதறி அலைந்து
அழுது திரிந்த நாட்கள்!

அவையெல்லாம்
போய்த் தொலைந்து
இரண்டு வருடம் ஆனதா
நம்பத்தான் முடியவில்லை!
எங்கள் நிலத்தை
எங்கள் வளத்தை
மறந்து
அழுது குளறிய
நாங்கள்

குட்டக் குட்டக்
குனியப்
பழகிப் போயிருந்த
நாங்கள்
நிமிருதல் என்பது
எப்படிச் சாத்தியமானது?...

மக்கட் புரட்சியோடு
பசுமைப் புரட்சியும்
கலந்து விளைந்திட
ஆசைகொண்ட
இந்த விளை நிலத்தின்
வித்துக்கள் விழுதுகளின்
உந்துதலில்
அவர்களின்
விழுகையில் தான்
இந்த எழுகை
என்பது
சாத்தியமானதா?

- தூயவள்

### மனித மூளையின் சிறப்பியல்புகள்

★ மனித மூளை இரு பிரிவுகளைக் கொண்டது ஒரு பிரிவின் பிரதி பிம்பத்தைப் போல் மற்ற பிரிவு அமைந்திருக்கும் வலது பக்க பிரிவு உடம்பின் இடது பக்க தசைகளின் ஆணைகள் மற்றும் செய்திகளைப் பெற்று இயங்கும் அதேபோல் மூளையின் இடது பக்கம் உடலில் வலது பக்க இயக்கத்துக்கு உதவி கட்டுப்படுத்தும்

★ சராசரி மனித மூளையின் எடை பிறந்தது முதல் பருவமடையும் வரை மும்மடங்கு அதிகரிக்கும். ஆண்களது மூளையின் எடை சராசரி 1.4 கிலோவும் பெண்களது மூளை சராசரியாக 1.3 கிலோவும் இருக்கும்.

★ மூளையின் அளவுக்கும் (பரிமாணம்) புத்திசாலித்தனத்துக்கும் இடையே எவ்வித சம்பந்தமும் கிடையாது மூளையில் உள்ள மடிப்புகளின் எண்ணிக்கையே இதைத் தீர்மானிக்கிறது.

★ வலது கைப்பழக்கமுள்ளவர்களின் (அதாவது பெரும்பான்மையினர்)மூளையின் இடது பக்கம் எழுதுவது படிப்பது பேசுவது போன்ற திறன்களைக் கட்டுப்படுத்துகிறது. இவர்களது மூளையின் வலப்புறம் கற்பனை கலைத்திறன்போன்றவற்றை நிர்ணயிக்கிறது இடது கைப் பழக்கமுள்ளோருக்கு இது நேர்மாறாய் அமையும் அதாவது மூளையின் இடப்புறம் கற்பனை கலைத்திறனையும் வலப்புறம் எழுதுவது படிப்பது போன்றவற்றையும் கட்டுப்படுத்தும்.

# ஒரு கைப்பிடியுள்

சிறுகதை

## செ. பொ. சிவனேசு

அந்தப் பிடிக்குப் பொருளென்ன? இறுகப் பற்றிய பிடிக்குள் இருந்தது மண்- வெறும் மண் ...... வெறும் மண்ணா? சுதந்திரத்தின் குறியீடு! - தாயகத்தின் தவிப்புத் தெரிந்தது, மக்களின் கொதிப்புத் தெரிந்தது ... வெறும் மண்ணா? - கையிலெடுத்த தினக்குறிப்பு ஏடு இத்தகைய வினாவையும், விடைகாணும் முனைப்பையும் தூண்டி விட்டது. இவன் பொறுப்பிலுள்ள படைப் பிரிவிலிருந்து நேற்று விதையாகிப் போன மாவீரனது. பக்கங்களைப் புரட்டினான். குறிப்பு வாரியான பதிவுகள் - குறுகலாய் இருந்தது உருவிற் தான் - உள்ளடக்கம் பரந்தது, கடுகினது காரம் போல். புதிய சிந்தனைகள் - பட்டறிவின் வெளிப்பாடுகள் ஆங்காங்கே கவிதைகளுள் சில, கண்கள் வழி நுழைந்த மாத்திரத்திலேயே உள்ளார்ந்தத்தைக் கௌவியது ஒன்று:

''எனது கைப்பிடி சிறியதே
எனினும் உறுதி மிக்கது!
உள்ளிருப்பது ஒருபிடி மண்ணே
எனினும் எனது தாயகம்!-
கற்றுக்கொள் எதிரியே
கனத்த இராணுவப் பாதணி நசுக்கலில்
கைப்பிடி நழுவுதல் நடவாது-
எலும்பு நொருங்கட்டும்,
விரல்கள் தெறிக்கட்டும்
கையின் அழிவுவரை
கைப்பிடி தளராது!
அழிந்து,
பின்னும் உனதெண்ணம் நடவாது
என்னவர் என்னைத் தொடர்வதனால்'',

கபாலத்துள் பளீரிட்டது ஓ, இதுதான் பொருளா? என்னைப் போலத்தான்- அன்றைக்கு நானும் இப்படித்தான், அது பிரிவின் வெப்பிசாரத்தில் நடந்தது அவனையும் கூடப் பற்றியிருக்கலாம் என்றாலும், அவனிடம் ஒரு திடம் தெரிந்தது, ஒரு நம்பிக்கை

என்ன விதமாய்ச் சமர்க்களமாடினான்! தாயகத் தகிப்பு, தலைவரின் பொறுப்புணர்வாய்த் திரண்டு, போராளிப் பிரசவம்- அங்கு சுறுசுறுப்பிற்கும், வீரத்திற்கும் போதனை செய்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்தன எதிரித்தரப்பு துமுக்கிக் குண்டுகள். பன்னாடையாகிற்று அவனுடல். புகழுடல் கிடந்த நிலையின் நிழல் மீண்டும் இவனுள் வீழ்ந்தது. முகம் குப்புற .. அடடா, சரிந்த நிலையிலுமா மண்ணை முத்தமிடுகிறான்? இரு கைகளுமே இறுக மூடிய நிலை. ஒன்றில் அவனது துமுக்கி, மற்றதுள் தான் மண், வாரித் தன்னுடன் கொண்டு செல்லும் பாங்கல்ல - யாரிடமோ வாஞ்சையுடன் ஒப்படைக்க முனைபவனாக......

சிந்தனை பின்னோக்கி விரட்டப் பட்டது; எண்பதுகளுள் தரித்தது.

### 2

என்னுடன் இன்னுமொரு பத்துப்பேர் படகுக்காக நடக்கிறோம். பனைகள் செறிந்த நிலப்பரப்பு, ஊடறுத்து ஓர் ஒற்றையடிப்பாதை; நெடுகிலும் புதர்கள், இந்த இருளைப் போலவே அடர்த்தி எனக்குள் ஒரு யோசனை 'இந்தப் பிரபஞ்சமே அடக்கம் செய்யப்பட்டு விட்டதா என்ன?' அமைதி! - சில்வண்டுகளின் ரீங்காரம், அவ்வப்போது காவோலைச்சலசலப்பு, தூரத்தே அலைகள் கட்டிப்புரள்வதன் ஓசை கழித்துப் பார்த்தால் மயான அமைதி. எல்லோர் உதடுகளும் ஊசி இழை கொண்டு தைத்து விட்டது போல...... பேசக்கூடாது. ஏற்கனவே பொறுப்பாளர் எச்சரித்திருந்தார். முன்னே வழிகாட்டியாய் அவர்தான்.

ஒற்றையடிப் பாதையில் அடிக்கடி வளைவு. பகலில் பார்த்தால் எப்படி இருக்கும்? பனையொன்றின் உச்சியில் நின்று பார்க்க வேண்டும், அடித்துப் போட்ட பாம்புதான்.

கால்களில் உளைவெடுத்தது. குடாவின் மத்திய பகுதிக்கு-திணிவான செம்மண் தரைக்கு மட்டுமே பெரும்பாலும் முத்தம் கொடுத்துப் பழகியவை. ஐதான வெண் மணல் பரப்பில் பாதங்கள் புதையுண்ணப் புதையுண்ண அடி எடுப்பது தொடர்ந்து நடப்பது புதிது. கால் தசைநார்களில் குத்துவலி நாலாபக்கமும் தலையைத் திருப்புகிறேன். இருளை ஊடுருவக் கண்கள் கடினப்பட்டன. மற்றவர் உருவங்கள் மங்கலாய்த் தெரிந்தது. பெரும்பாலும் என்னைப் போலத்தான்; சிரமப்பட்டனர்.

என்னவென்றாலும் வேகத்துக்குக் கெடுதியில்லை- நடையின் சீரிற்கு இடையூறில்லை. நெருப்போ நெஞ்சு நிறைய; அந்த வெக்கையால் வந்த தாகம் இதயம் முழுக்க இதன் வலு தள்ளிச் சென்றது. அப்போதைய ஒரே குறி ஆயுதப்பயிற்சி. இப்போது போலல்ல இப்போது எத்தனை பெரிய வளர்ச்சி கண்டுள்ளது பயிற்சியில் கூட... அப்போது அண்டை நாட்டுக்குப் போகவேண்டும் பயிற்சிக்கு. எங்கள் தாகமே வேகமாய் வெளிப்பட்டதால் காலுளைவு பெரிதாய்ப் படவில்லை

எங்கோ ஒரு தொலைவில் நாயொன்று குரைத்தது. சட்டென்று நிற்கிறோம். சுற்றுமுற்றும் கவனிக்கிறோம். கண்ணுக்குப் புலப்படாத் தொலைவையுங்கூடக் கவனிக்கிறோம், மனக்கண்ணால்.

அப்படி அவ்வப்போது நடந்தது. ச்சே, எங்கள் நிலத்தில் நாங்கள் நடப்பதற்கே எத்தனை எச்சரிக்கை! எவ்வளவு கவனம் எங்கேயோ இருந்து அதிகாரம் பண்ணுகிற, யாரோ ஒரு பிறத்தியானுக்கு எவ்வித அச்சம்!

எனக்குள் கொதிப்பு இன்னுமின்னும் பற்றியது. ஏதோ ஒரு வேகம், சரியாகப் பெயர் நினைவில்லை, ஒருகவிஞன் உரைத்து எனக்குள் பாடுகிறான்:

''எங்கள் தந்தையர்
தவழ்ந்த நிலமிது
எங்கள் தாயர்
அளைந்த மண்ணிது
தவழவும் அளையவும்
தடைகளா எமக்கு?

எங்கள் தந்தையர்
உழுத வயலிது-
எங்கள் தாயர்
கதிர் சுமந்த வரப்பிது
உழவும் சுமக்கவும்
தடைகளா எமக்கு?

எங்கள் தந்தையர்
ஆண்ட கடலிது-
எங்கள் தாயர்
காத்த கரையிது
ஆளவும் காக்கவும்
தடைகளா எமக்கு? ..''

உதடுகள் அசையவில்லை- உள்ளம் முணுமுணுத்தது; திரும்பத் திரும்ப ஒப்புவித்தது, வரவர வரிகள் அனலாகின; அனற்சக்கரமாய் சுழன்றன; ஊதுலையாய் உள்ளுக்குள் விளாசியது.

வீசிவந்த மெல்லிய காற்றில் ஒரு மாற்றம்- புழுக்கம் கலந்த ஈரலிப்பை உடலில் அப்பியது. புரிந்தது- அலைகள் உருண்டு, புரண்டு, கும்மாளம் போடுவது, ஓடிவந்து கரையேறுவது காதில் தெளிவாய் விழுந்தது- அண்மித்து விட்டோம்.

### 3

நடக்கத் தொடங்கிப் பதினைந்து மணித்துளிகள். ஈரமும், குளிர்ச்சியுமாய்ப் பாதங்களைத் தீண்டியது; அடியிலே எறும்பு ஊர்வது போன்ற கூச்சம்; சில்லென்றது முள்ளந்தண்டுள்; மின்னல் வெட்டியது போல் உச்சந்தலை வரை ... அலை திரும்பி ஓடியது — தொட்டுவிட்டேன் என்ற வெற்றிக் கொண்டாட்டம்; கெக்கலி கொட்டிச் சிரித்தபடி ஓடியது.

தாரகைகள் உதவின; அலையைப்பின் தொடர்ந்து ஓடிய பார்வையில் படகு விழுந்தது. மங்கலாய்த்தான் தெரிந்தது. ஆனாலும், பேயாய்த் திகைக்க வைத்தது. காதுகளை ஊடுருவும் பனிக்குளிர் ஊசி போல், நெஞ்சுக்குள் வேதனையால் சிலிர்க்கிறேன். இதற்கு மேல் நகர முடியவில்லை கால்கள் இறுகிப் போனது போல இருந்தது. நன்றாய்ப் பார்க்கிறேன். இரண்டும் அதிவேக இயந்திரங்கள்— எண்ணெய் குடிக்கிற, கடலில் பாய்கிற குதிரைகள் இரண்டு மணித்தியாலமே மிச்சம்; அடுத்த கரை —வேறொரு நாடு. பிரிவுத்துயர் — நெஞ்சைப் பிழிந்தது. போகப்...போகப் போகிறேன்!...... இந்தத் தாயை — தாய் மண்ணை விட்டு ... பிறந்தேன், வளர்ந்தேன்... அவ்வளவுந்தானா? இதில் நான்; என்னில் இது — பிணைந்தே போன ... இங்கு இருக்கிறது ஆதாரம் — இந்தப் புழுதி — கால் நகஇடுக்களுக்குள் பதிந்து கிடக்கிறது சோற்றின் சிவபபு ... ச்சே! என்ன இது? ஏன் இப்படி அலை மோதுகிறது மனம்? அதுதான் ...... திரும்பி வரத்தானே ..ஆனால், வாய்ப்புக் கிடைக்குமா? ... அப்படியொரு பொற்காலம் ... விடுதலைக்கு விலையாய் உயிரைப் பேசியாயிற்று ... எந்த நேரத்திலோ? எந்த இடத்திலோ? ... ...

சின்னச்சின்னச் சவனங்களுக்கு வலுவிருப்பதில்லை, கடமையுணர்ச்சியுள்ளவனைக் கட்டிப்போட அசைக்கிறேன், ஏதோ ஒரு உள்ளுந்துகைநகர வைத்தது. சற்றுப் பின் வாங்கி வருகிறேன். அலைகள் தலைவருடி விடுவதற்கு எட்டாத கரையில் குனிகிறேன்- உண்மையாகப் என்ன செய்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை-பயபற்றாய்க் குனிகிறேன் அடுத்த நொடி எனது கையில் ஓர் பிடி மண். அப்போது புரிந்தது; ''என்தாய் ஆசீர்வதித்து அனுப்புகிறாள், புனிதப் பிரசாதம்தந்து.'' அந்தக் கவிஞன் திரும்பவும் என் கபாலத்துள் பாடுகிறான்;

''எங்கள் தந்தையார்
தவழ்ந்த நிலமிது
எங்கள் தாயார்
அளைந்த மண்ணிது!',

தாய் தந்ததைத் துணிப்பையில் கவனமாய்ப் பத்திரப்படுத்துகிறேன். என்னையறியாமலே நெஞ்சு நிமிர்கிறது. படகை நோக்கி நடக்கிறேன்.

### 4

''தோழா! மண்ணிற்காய் மாண்டவர்கள் எத்தனைபேர்? '' அந்த மாவீரனின் வரலாற்றுக் குறிப்பை வரையத் தொடங்கினான். '' எல்லைத்தகராற்றில் வாய்க்கால், வரப்புப் பிரச்சினைகளில் .. எல்லை, எல்லைவேலி ஒரங்குலம் பிசகியதற்கேவாளெடுத்தோர்எத்தனை?எத்தனை நீளஆறாய்க் குருதிஓடியிருக்கும்? இன்றைக்குத்தான் மண்ணிற்காய்மாள்வது நாளாந்த நடப்பு. இதன்மீது மட்டும் எந்த ஏளனப் பார்வைகளும் படிய முடிவதில்லை; புனிதப் பயணமெனப் போற்றுதல்பெறுகிறது. இங்கு நிகழ்கின்ற ஒவ்வொரு வீழ்கையும் ஈகையாய் உயர்கின்றது ஏன்? முன்னவைபோல் தன்னலக் குறுக்கத்துள் முடங்கிவிடக் கூடியதல்லவே நோக்கு? கருவி ஏந்துகிற ஒவ்வொருவனும் வீரனாய் நிமிர்கிறான். அவனுள் கருத்தெல்லாம் எதிர்காலச் சந்ததி; உயிரினும் மேன்நிலையில் விடுதலை உன்னதத்தை அன்று மீண்டும் உன்வசம்கண்டு கொண்டேன்... ''

எழுதிக்கொண்டே போனான். சடுதியாய் ஒரு விந்தை நிகழ்ந்தது; அவன்வசமின்றியே அவனிடம் அவனிற்கே திகைப்பாய் இருந்தது. நிறையப்படித்திருக்கிறான்; ஒரு கவிதைகூட எழுதிப் பழக்கமில்லை.வரலாற்றை எழுதி முடிக்கும் தறுவாயில் தெறித்து விழுந்தது ஒரு கவிதைகூட எத்தகைய உள்ளார்ந்த ஈடுபாடு! வரலாற்றைக் குறிப்புகளைப் பிரசவிக்க முனைய, இரட்டைப் பிரசவமாய்க் கவிதையுங்கூட:

''ஓ, வீரர்களே!
பொருண்மையும் உன்னதமும்
உங்கள் இறப்பிற்கு மட்டுமல்ல,
ஒவ்வொரு அசைவிலுங் கூட-
இறக்க நேர்கிற
இறுதி நொடியிலுந்தான்
அது வெளிச்சமாகிறது.
எங்கு கற்றீர் இந்த மகத்துவத்தை?''

---

## 'பிராணிகள்' கல்லறை

பெருந்தொகையான உல்லாசப் பயணிகளின் பார்வைக்கு நாள்தோறும்இலக்காகி வரும் கல்லறை' ஒன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரிலிருந்து 5 மைல் தொலைவில் காணப்படுகின்றது

இக் கல்லறைக்குள் புதைக்கப்பட்டிருக்கும் உடல்கள் இறந்த மனிதர்களது உடல்கள்அல்ல இறந்த பிராணிகளின் உடல்கள் இப்பொழுது புரிகிறதா இதன் அதிசயம் என்னவென்று இதில் புதைக்கப் பட்டிருக்கும் பிராணிகள் அனைத்தும் மனிதர்களை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்காக தங்களது உயிர்களை ஏதோ ஒரு விதத்தில் அர்ப்பணித்த தியாகிகள் இச்கல்லறையில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான சமாதிகள்காணப்படுகின்றன இதில் நாய், பூனை, குரங்கு என்பவற்றிற்கே அதிகமான சிலைகள் காணப்படுகின்றன இக்கல்லறையில் நுழைவாயிலில்வரவேற்பது போல் நிமிர்ந்து நிற்பது ஒரு நாயின் சிலை அதில் இந்த நன்றியுள்ள ஜீவன் 40 மனித உயிர்களை காப்பாற்றி 41வது மனிதனை காப்பாற்றும் போது அந்த மனிதனாலேயே கொல்லப் பட்டது என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இன்னொரு இடத்தில் 'பெப்லின் என்ற பெயர் கொண்ட நாயின் சிலை காணப்படுகின்றது இந்த நாயை சிறுமி ஒருத்தி அணைத்துக் கொண்டு நிற்பது போல் உள்ளது அதில் 'கட்டிடம் ஒன்று எரிந்த போது அதனுள் அகப்பட்ட சிறுமி ஒருத்தியை முதுகில் சுமந்து வந்து காப்பாற்றியது என்றும் பின்னர் ஒரு தடவை தான் வசித்து வரும் பகுதிக்குள் கொள்ளையர் வந்த பொழுது அவர்களை 'பெப்லின்' துரத்திச் சென்ற சமயம் கொள்ளையரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி உயிர் துறந்தது என்றும் காணப் படுகின்றது. இதேபோல் ஒவ்வொரு பிராணிகளின் சமாதிகளிலும் ஒவ்வொரு வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

தகவல்:
கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை

---

## புற்று நோயும் பாதிப்புகளும்

# ஈழத்தமிழரின் தேசிய ஒருமைப்பாடு

தமிழ் மண்ணில் இருந்தமையினால் இதன்பொருட்டு அவர்கள் எடுத்த இன நிலைப் பாடும் தமிழ்த் தேசிய தி...

முடிய நிலை. ஒன்றில் அவனது துமுக்கி, மற்றதுள் தான் மண், வாரித் தன்னுடன் கொண்டு செல்லும் பாங்கல்ல - யாரிடமோ வாஞ்சையுடன் ஒப்படைக்க முனைபவனாக......

சிந்தனை பின்னோக்கி விரட்டப் பட்டது; எண்பதுகளுள் தரித்தது.

2

என்னுடன் இன்னுமொரு பத்துப்பேர் படகுக்காக நடக்கிறோம். பனைகள் செறிந்த நிலப்பரப்பு, ஊடறுத்து ஓர் ஒற்றையடிப்பாதை; நெடுகிலும் புதர்கள், இந்த இருளைப் போலவே அடர்த்தி எனக்குள் ஒரு யோசனை 'இந்தப் பிரபஞ்சமே அடக்கம் செய்யப்பட்டு விட்டதா என்ன?' அமைதி! - சில்வண்டுகளின் ரீங்காரம், அவ்வப்போது காவோலைச்சலசலப்பு, தூரத்தே

அப்போதைய ஒரே குறி ஆயுதப்பயிற்சி. இப்போது போலல்ல இப்போது எத்தனை பெரிய வளர்ச்சி கண்டுள்ளது பயிற்சியில் கூட... அப்போது அண்டை நாட்டுக்குப் போகவேண்டும் பயிற்சிக்கு. எங்கள் தாகமே வேகமாய் வெளிப்பட்டதால் காலுளைவு பெரிதாய்ப் படவில்லை

எங்கோ ஒரு தொலைவில் நாயொன்று குரைத்தது. சட்டென்று நிற்கிறோம். சுற்றுமுற்றும் கவனிக்கிறோம். கண்ணுக்குப் புலப்படாத் தொலைவையுங்கூடக் கவனிக்கிறோம், மனக்கண்ணால்.

அப்படி அவ்வப்போது நடந்தது. ச்சே, எங்கள் நிலத்தில் நாங்கள் நடப்பதற்கே எத்தனை எச்சரிக்கை! எவ்வளவு கவனம் எங்கேயோ இருந்து அதிகாரம் பண்ணுகிற, யாரோ ஒரு பிறத்தியானுக்கு எவ்வித

ஆனாலும், பேயாய்த் திகைக்க வைத்தது. காதுகளை ஊடுருவும் பனிக்குளிர் ஊசி போல், நெஞ்சுக்குள் வேதனையால் சிலிர்க்கிறேன். இதற்கு மேல் நகர முடியவில்லை கால்கள் இறுகிப் போனது போல இருந்தது. நன்றாய்ப் பார்க்கிறேன். இரண்டும் அதிவேக இயந்திரங்கள்— எண்ணெய் குடிக்கிற, கடலில் பாய்கிற குதிரைகள் இரண்டு மணித்தியாலமே மிச்சம்; அடுத்த கரை —வேறொரு நாடு. பிரிவுத்துயர் — நெஞ்சைப் பிழிந்தது. போகப்...போகப் போகிறேன்!...... இந்தத் தாயை — தாய் மண்ணை விட்டு ... பிறந்தேன், வளர்ந்தேன்... அவ்வளவுந்தானா? இதில் நான்; என்னில் இது — பிணைந்தே போன ... இங்கு இருக்கிறது ஆதாரம் — இந்தப் புழுதி — கால் நகஇடுக்களுக்குள் பதிந்து கிடக்கிறது சோற்றின் சிவபபு ... ச்சே! என்ன இது? ஏன் இப்படி அலை மோதுகிறது மனம்? அது

எழுதிக்கொண்டே போனான். சடுதியாய் ஒரு விந்தை நிகழ்ந்தது; அவன்வசமின்றியே அவனிடம் அவனிற்கே திகைப்பாய் இருந்தது. நிறையப்படித்திருக்கிறான்; ஒரு கவிதைகூட எழுதிப் பழக்கமில்லை. வரலாற்றை எழுதி முடிக்கும் தறுவாயில் தெறித்து விழுந்தது ஒரு கவிதைகூட எத்தகைய உள்ளார்ந்த ஈடுபாடு! வரலாற்றைக் குறிப்புகளைப் பிரசவிக்க முனைய, இரட்டைப் பிரசவமாய்க் கவிதையுங்கூட:

''ஒ, வீரர்களே!  
பொருண்மையும் உன்னதமும்  
உங்கள் இறப்பிற்கு மட்டுமல்ல,  
ஒவ்வொரு அசைவிலுங் கூட-  
இறக்க நேர்கிற  
இறுதி நொடியிலுந்தான்  
அது வெளிச்சமாகிறது.  
எங்கு கற்றீர் இந்த மகத்துவத்தை?''

சுமந்து வந்து காப்பாற்றியது என்றும் பின்னர் ஒரு தடவை தான் வசித்து வரும் பகுதிக்குள் கொள்ளையர் வந்த பொழுது அவர்களை 'பெப்லின்' துரத்திச் சென்ற சமயம் கொள்ளையரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி உயிர் துறந்தது என்றும் காணப்படுகின்றது. இதேபோல் ஒவ்வொரு பிராணிகளின் சமாதிகளிலும் ஒவ்வொரு வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

தகவல்:  
கி. செல்மர் எமில்  
ஊர்காவற்றுறை

## புற்று நோயும் பாதிப்புகளும்

இலங்கையில் காணப்படும் புற்று நோய்களில் சுமார் 80 சதவீதமானவற்றைக் குணப்படுத்த முடியுமென வைத்தியர்கள் கூறுகின்றனர்,

இலங்கையில் வருடந்தோறும் புற்றுநோயால் 500க்கு மேற்பட்டோர் இறக்கின்றனர் 35 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டோர்களின் மரணத்திற்கான காரணங்களில் புற்றுநோய் மூன்றாவது இடத்தை வகிப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நுரையீரல், கருப்பை, சிறுநீரகம், மார்பகங்கள், உணவுக்குழாய் போன்ற பல்வேறு உறுப்புக்களில் புற்றுநோய் பீடிக்கிறது.

35 வயதுக்கு மேற்பட்டவர்களே கூடுதலாக புற்றுநோயினால் பீடிக்கப்படுகிறார்கள் இதுவரை ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட புற்று நோயாளர் பதிவு செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடைதல், மனக்கவலை, அதிக கொழுப்புள்ள உணவை உட்கொள்ளுதல், உணவைப் பாதுகாத்து வைக்கும் சில முறைகள், சூழல் மாசடைதல், கதிர்வீச்சு, பழக்க வழக்கங்கள், வைரசு போன்ற காரணிகளால் புற்றுநோய் ஏற்படலாம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றார்கள்

வெற்றிலை, புகையிலை போன்றவற்றின் உபயோகத்தினால் வாய்ப் புற்று நோய் ஏற்படக்கூடும். ஒரு நாளைக்கு உட்கொள்ளும் வெற்றிலையின்அளவு அதனை வாயில் வைத்திருக்கும் நேரம் என்பனவற்றைப் பொறுத்து வாய் புற்று நோயின் அபாயம் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. வாயைத் துப்புரவாக வைத்துக்கொள்ளாமை மதுபானம், போன்றவையும் புற்றுநோயை ஏற்படுத்தும்.

நுரையீரல் புற்று நோயில் 95 சதவீதமானவை புகைத்தலால் ஏற்படுகின்றதென ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது, நுரையீரல் புற்றுநோய் ஆசிய நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றென உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது

புகைத்தல் மட்டுமன்றி சுறறாடல் மாசடைவதாலும் தொழிற்சாலைகளால் உண்டாகும் நச்சு வாயுக்கள் இரசாயனத் துணிக்கைகள் என்பவற்றாலும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படக்கூடும். கூடுதலான புகைத்தல் மற்றுமொரு காரணமாகும். மறைமுகமான புகைத்தலால் புற்று நோய்களும் வேறு நோய்களும் ஏற்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியர்கள் கூறுகின்றார்கள்-

பெண்களுக்கு பொதுவாக மார்பகங்களிலும் கருப்பையிலும் புற்றுநோய் ஏற்படலாம்- 35 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் இந் நோயினால் பீடிக்கப்படுகிறார்கள். புற்றுநோய் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்தால் அதனைக் குணப்படுத்த முடியுமென தெரிவிக்கப்படுகிறது- கவனயீனம் காரணமாகவே பலர் மார்பகப் புற்றுநோய்க்கு இலக்காவதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றார்கள்-

லித்தீனியா என்னும் குருதிப் புற்றுநோய் இன்று பெருமளவில் காணப்படுகிறது- பெரும்பாலும் சிறுவர்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர்-

# ஈழத்தமிழரின் தேசிய ஒருமைப்பாடு

## மு. திருநாவுக்கரசு

இளைஞர்களின் வீரச்சாவு, தற்தியாகம் என்பவற்றுடன் நாற்பதுனாயிரத்துக்கும்குறையாதளவு தமிழ் மக்களை சிங்கள, இந்திய, மற்றும் அந்நிய சக்திகள் கொன்று குவித்தும் உள்ளன இவற்றிற்கும் அபபால் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்டும் வீடுகள் அழிக்கப்பட்டும், மற்றும் சொத்துக்கள் நாசமாக்கப் பட்டும் உள்ளன.

இத்தனைக்குப் பின்பும் ஈழத்தமிழரின் தமிழ்த்தேசியத்தன்மை எவ்வாறுள்ளது?

தேசிய சமூகமாக வாழ்வதன் முக்கியத்துவம் சரிவர உணரப்பட வேண்டும். இதுவரை மனிதகுலம் கண்டுள்ள முன்னேற்றங்களுள் தேசிய சமூக வாழ்வென்பது ஒரு சிறப்பிடத்தை வகிககின்றது. இத்தேசிய வாதமென்பது குழுவேறுபாடு, சாதிவேறுபாடு பிரதேச வேறுபாடு ஆகிய அனைத்துச் சமூக வேறுபாடுகளையும் கடந்த ஒரு தேசிய ஒருமைப்பாட்டை கோரிநிற்கிறது. சக்கரவர்த்திகளாகவும், மன்னர்களாகவும், பிரபுக்களாகவும், உடையார், முதலியார்களாகவும், உயர்ந்தசாதி தாழ்ந்த சாதிகளாகவும் மனிதன் பிறக்கிறான் என்பதே தேசியவாதத்திற்கு முற்பட்ட கால சமூக ஒழுங்கும் வாழ்க்கை நெறியுமாகும் ஆனால் தேசிய வாதம் என்பது பிறப்பால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டை முற்றிலும் நிராகரிப்பதுடன் சக்கரவர்த்தியிலிருந்து சாமானியன்வரை அனைவரும் சட்டத்தின் முன் சமன் என்பதே அதன் பிரதானமான இலட்சியமாகும்.

தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு, பிரதேச ஒருமைப்பாடு, தன்னாதிக்கம் தேசிய சுதந்திரம் என்பன தேசிய வாதம் பொறுத்து அடிக்கடி உச்சரிக்கப்படும் மந்திர வார்த்தைகளாகும் ஈழத்தமிழர் தேசிய ஒருமைப் பாட்டை எவ்வளவு தூரம் அடைந்துள்ளனர்?

தேசிய ஒருமைப்பாட்டை ஒரு சமூகம் திடீரெனப் பெற முடியாது அது நீண்ட வரலாற்று வளர்ச்சிக்கு உரியது உலகிற் தேசிய வாதம் தோன்றி குறைந்தது மூன்று நூற்றாண்டுகள் ஆகிவிட்டது எனவே தமிழ் தேசியத்தினை பற்றி குறைந்தது ஒரு நூற்றாண்டுக் கால கட்டத்தை ஆவது எடுத்து ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியம். இக்கட்டுரை அந்த வகையிற் சில குறிப்புரைகளை மட்டுமே கோடிட்டுக் காட்ட முனைகிறது

தேசிய வாதத்திற்கு இரு பிரதான பரிமாணங்கள் உண்டு. ஒன்று, அந்நியரின் ஆதிக்கத்திற்கு எதிரான தன்னுணர்வு பெறுதல். இரண்டு குறித்த தேசிய மக்கள் தங்களுக்குள் எல்லா வகையிலும் தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஐக்கியத்தையும் பெறுதல் முதலாவது தேசியவாதத்தின் வெளிநிலைமை என்றும், மற்றையது தேசியவாதத்தின் உள் நிலைமை என்றும் விளக்கப்படும். இந்த உள்வயத் தேசிய வளர்ச்சியை ஒரு சமூகம் அடையும்போதுதான் அதன் தேசிய வளர்ச்சி உண்மையான வடிவத்தைப் பெற முடியும்.

இந்தியாவில் மகாத்மா காந்தி இந்தியர்களை அந்நியருக்கு எதிராக ஒருமுகப்படுத்தினாரே தவிர இந்தியர்களை உள்வயமாக ஒரு தேசிய சமூகமாக்க முடியவில்லை. இந்தியர்கள் சாதி, இன, குழு, பிராந்திய எல்லைகளை, குறுகிய மனப்பாங்குகளைச் சற்றும் தாண்டவில்லை என்றே கூறலாம். சுதந்திரத்தின் பின்பு இத்தகைய வேறுபாடும், குரோதமும் மேலும் இறுகியே உள்ளன எனலாம். வட இந்தியர்களின் இன ஆதிக்கததிற்கு எதிராக ஈ. வே. ரா, அண்ணாத்துரை போன்றோர் திராவிட தேசிய வாதத்தை உருவாக்க முனைந்தனராயினும் இவர்கள் குறைந்தது தமிழக மக்கள் மத்தியிலாவது உள்வயத் தேசிய வாதத்தை உருவாக்கத் தவறிவிட்டனர். அண்ணாத்துரையின் தமிழ்த் தேசியத் தலைமையின் கீழும், அவரது ஆட்சியின் கீழும் தமிழகம் இத்தகைய முன்னேற்றத்தை எட்டாது தமிழர் மத்தியில் சாதி, குழு, இனக்குழுத் தன்மைகள் தொடர்ந்தும் வேருடனும், விழுதுகளுடனும் உள்ளன. தேசியம் பற்றிய சரியான புரிந்துணர்வும், கருத்துருவமும் அண்ணாத்துரையிடம் இருந்திருக்கவில்லை. அண்ணாத்துரையின் எழுத்துக்களிலோ, அன்றில் பேச்சுக்களிலோ அதனைக் காண முடியவில்லை. அவரிடம் காணப்பட்டது இனமானமே தவிர தேசியப் பண்பல்ல. தமிழ்த் தேசியத்தையோ, அன்றி முழு இந்தியாவிலும் இந்தியத் தேசியப் பண்பையோ மேற்குறித்த அர்த்தத்தில் உருவாக்கக் கூடிய தலைவர்கள் யாரும் இந்தியாவில் இதுவரை தோன்றி இருக்கவில்லை.

ஈழத்தமிழ் மண்ணில் இரு கட்டத் தேசியத் தன்மையைக் காணலாம் ஒன்று முழு இலங்கைத் தீவும தழுவிய இலங்கையர் தேசியம் மற்றையது தமிழ்த் தேசியம். சேர்- பொன். இராமநாதன், சேர். பொன் அருணாசலம் போன்றோர் கொழும்பை மையமாகக் கொண்டு தமிழரை இலங்கையர் தேசியத்திற்கு இழுட்டுச் சென்றனர். இவர்களுடன் கொழும்பை மையமாகக் கொண்டு தமிழ் மண்ணுக்கு வெளியே நலன்களைக் கொண்ட ஓர் உயர் குழாத்தின் கையிற் தமிழ்த் தலைமை சிக்குண்டது- அமிர்தலிங்கம் வரை நிலைமை இதுவே-

ஆதலால் தேசியத்தின் முதலாவது அபசமாகிய அதன் வெளிவயத் தேசியத்தைக் கூட இவர்களால் கட்டிவளர்க்க முடியவில்லை- இத்தலைவர்கள் செந்திப் பாயும்போது அதுவும் தேர்தலின்பொருட்டு இவர்கள் கால்கள் தமிழ் மண்ணில் சில தடவைகள் படும்- ஏனைய வேளைகளில் இவர்களது கால்கள் தென்னிலங்கையிலும். இலங்கைக்கு வெளியிலுமே பதிந்திருந்தன- எப்போதும் இவர்கள் தமிழ் மண்ணுக்கு வெளியே இருந்து நலன்களுக்காகத் தமிழரின் தேசிய நலன்களை விற்கவோ அன்றி விட்டுக் கொடுக்கவோ தயாராய் இருந்தார்கள்- இதனால் இத்தலைமைகள் மிகவும் ஊசலாட்டம் நிறைந்த வகையிற் காணப்பட்டன- தேர்தல் நலன்கள் இவர்களுக்குத் தமிழ் மண்ணில் இருந்தது- பொருளாதார, உயர்குழாத்து நலன்கள் தென்னிலங்கையில் இருந்தது- இவ்விரு நலன்களுக்கும் இடையில் ஊசலாட்டம் நிலவியபோதிலும் இறுதியில் அவர்களது தென்னிலங்கையில் அத்திவாரமிட்டிருந்த பொருளாதார நலன்களே வெற்றி பெறுவதுண்டு- சமரசங்களின் அரசியற் பின்னணி இதுவே- இதனால் வெளிவயமான தேசியமும் உறுதிபெற முடியாது போயிற்று- எதிரியின் விட்டுக் கொடுப்பற்ற ஒடுக்கு முறையும் மேற்படி தமிழ்த் தலைமையின் அரசியல் நலன் தமிழ் மண்ணில் இருந்தமையினால் இதன்பொருட்டு அவர்கள் எடுத்த இன நிலைப்பாடும் தமிழ்த் தேசியத்தின் இன உணர்வைப் பேணவழிவகுத்ததே தவிர தமிழ்த் தேசியத்தை வெளிவய உள்வய ரீதியில் உருவாக்க முடியவில்லை-

இதே வேளை தம்மை ''இடதுசாரிகள்'' என அழைத்துக் கொள்பவரினது இலங்கை தழுவிய தேசிய நிலைப்பாடும் இவர்களைப் போலவே தம்மை ''மாக்ஸிஸப் புத்திஜீவிகள்'' என அழைத்துக் கொள்பவர்களினது நிலைப்பாடும் தமிழ்த் தேசியத்திற்குத் தொண்டாற்றத் தவறியது இவர்கள் ஆழ்ந்த அர்த்தத்தில் பெருந்தேசிய வாதத்திற்குச் சேவைசெய்தனர் என்றே சொல்ல வேண்டும். இந்த மாக்ஸிய 'பண்டிதர்கள்'', தேசியத்தின் மகத்துவம் பற்றிய மாக்ஸியத்தின் உன்னதமான உள்ளடக்கத்தை உணரத் தவறியதுடன். தென்னிலங்கையில் தமக்கு உள்ள அனுகூலங்களின் நிமித்தம் திட்டமிட்டுச் செயற்பட்டனர் எனலாம்.

இதனால் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் சிங்கள எதிரியின் இனக்கொலைகள், குடியேற்றங்கள். மொழி மற்றும் ஏனைய ரீதியிலான தீவிர ஒடுக்குமுறைகளால் தமிழர் என்ற இனவடிவிலான உணர்வு வளர்ந்த போதிலும் ஏனைய வெளிவய உள்வய தேசியப் பண்பு வளரமுடியாதிருந்தது.

இந்த இன உணர்வு தேசியத்தில் ஒரு தற்பாதுகாப்பு உணர்வை மட்டும்தான் கொண்டதே தவிர ஏனைய அம்சங்களை அல்ல கூட்டணியினர், அதாவது சில கூட்டணி எம்பிக்கள் சிகை அலங்கார நிலையங்களில் சிகை அலங்கரிக்கும் தொழிலில் ஈடு

( 2 ஆம் பக்கம் பார்க்க)

# அவர்கள் எதிரியின் இரக்கத்தில் தங்கியிருப்பதில்லை

1987, ஒக்டோபர், 2 ஆம் திகதி

ஆயுதங்களுடன் ஒரு படகு பாக்கு நீரிணையிற் காணப்படுவதாக சிறிலங்கா கடற்படைக்குத் தகவல் கிடைத்தது. இத்தகவல் ஐ பி. கே. எவ். இடமிருந்து கிடைத்ததாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன ஒருரோந்து படகு சம்பந்தப்பட்ட படகைத் தேடிப் புறப்பட்டது. ஒரு விரைவுப்படகு சிறிலங்காவின் கடற்பரப்பைத் தாண்டிச் செல்ல முயல்வதை அவர்கள் கண்டார்கள். படகை நெருங்கிய போது அது தமிழ்ப் போராளிகளுடையது என்று தெரிந்தது. அதிலிருந்து வேட்டுக்கள் எதுவும் தீர்க்கப்படவில்லை. கடற்படையினர் படகிலிருந்தவர்களைச் சரணடையக் கேட்டார்கள் படகிலிருந்த 17 பேர்களும் எதுவித எதிர்ப்புமின்றிச் சரணடைந்தார்கள். கடற்படைப்படகு கைப்பற்றப்பட்ட படகோடு காங்கேசன் துறை துறைமுகத்திற்குத் திரும்பியது. அங்கே ஒரு சிப்பாய் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவரை அடையாளம் காட்டினான். அது புலேந்திரன், புலிகளின் திருமலைத தளபதி என்று அவன் கூறினான். அப்பொழுதுதான் கடற்படையினரிற்குத் தாம் கைப்பற்றிய சொத்தின் பெறுமதி தெரிந்தது.

புலிகள் 17 பேரும் பொறுப்பதிகாரி, பிரிகேடியர் ஜெயந்த ஜெயரட்ணவிடம் ஒப்படைக்கப்பட்டனர் ஜெயரட்ண தனது மேலதிகாரிகளிற்குத் தகவலை அனுப்பினார் கைது செய்யப்பட்டவர்களை உடனடியாகக் கொழும்பு கொண்டு வரும்படியும் இதற்கென விசேட விமானம் ஒன்று கொழும்பிலிருந்து பலாலிக்கு அனுப்பப்படும் என்றும் கொழும்பு அறிவித்தது.

இதற்கிடையில் தமதுசகாக்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் புலிகளிற்குத் தெரிந்து விட்டது அவர்கள் ஐ பி கே எவ் தலைவர்களை அணுகினார்கள். உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக்கிணங்க கைது செய்யப்பட்ட தமது சகாக்களை விடுதலை செய்யும்படி புலிகள் ஐ.பி.கே.எவ் ஐக் கோரினார்கள்.

ஐ பி கே.எவ். தளபதிகளில் ஒருவரான றொட்றிக்கஸ் புலிகளை விடுதலை செய்யும்படி ஜெயரட்ணவிடம் கேட்டார் ...ளில் சயனைற் குப்பிகள் காணப்பட்டன எங்களைக் கொழும்புக்கு எடுத்துச்செல்ல முயன்றால் நாங்கள் சயனைற் அருந்துவோம் என்று புலிகள் எச்சரித்தார்கள் ஜெயரட்ண உடனடியாக புதிய திருப்பத்தை கொழும்புக்குத் தெரிவித்தார் ஆனால் கொழும்பு திரும்பவும் சொன்னது புலிகளை உடனடியாக அனுப்பு என்று,

றொட்றிக்கஸ ஜெயரட்ணவிடம் மறுபடியும் வந்தார் "அவர்களைக் கொழும்பிற்கு அனுப்ப வேண்டாம் அவர்கள் இறந்தால் இங்கு குருதி பெருக்கெடுத்தோடும்" என்று அவர் சொன்னார் இதற்கு ஜெயரட்ண சொன்னார் "இல்லை நான் எனக்குரிய உத்தரவுகளைப் பெற்றிருக்கிறேன் அவர்களைக் கொழும்புக்கு அனுப்பியாக வேண்டும்."

"நீங்கள் உங்களுடைய உத்தரவுகளைப் பெற்றிருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் ஸ்தலத்தில் நிற்கும் மனிதர் அழிவுக்கேதான் பின்விளைவுகளை உண்டு பண்ணும் எந்த ஒரு நகர்வையும் தவிர்க்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு" என்று றொட்றிக்கஸ் வாதாடினார். ஆனால் ஜெயரட்ண தனது முடிவை மாற்ற மறுத்துவிட்டார். றொட்றிக்கஸ் அவரிடம் விமானம் புறப்படுவதை 12 மணித்தியாலங்களுக்குத் தாமதிக்கும்படி கேட்டார் "டிக்சிற் இப்பொழுது டில்லியில் நிற்கிறார் அவர் இன்று பிற்பகல் 5 மணிக்குக் கட்டுநாயக்காவில் எதிர்பார்க்கப்படுகிறார் அவரால் ஜனாதிபதியின் மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கைது செய்யப்பட்ட புலிகளை ஐ பி கே எவ் இடம் கையளிப்பதற்கான உத்தரவைப் பெறமுடியும்" என்று றொட்றிக்கஸ் சொன்னார்.

ஆனால் ஜெயரட்ண பிடிவாதமாயிருந்தார் எனவே றொட்றிக்கஸ் அவரை மிரட்டலானார் "கைதிகளோடு உங்கள் விமானம் மேலெழுவதை நான் அனுமதிக்கமாட்டேன் கவசவாகனங்களை

## நிலாந்தன்

விமான ஓடுபாதைக்குச் செல்லும்படி நான் உத்தரவிடுவேன்" ஜெயரட்ண மிரளவில்லை அவர் சொன்னார்: ...

பதிகளைப்பணயமாக வைத்துக் கொண்டு பேரம் பேசுவது போல அமைந்திருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன டிக்சிற்றின் பதில் பலாலி முகாமிலிருந்த படி மாத்தையாவால் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனிற்குத் தொலைத்தொடர்புக் கருவி மூலம் அறிவிக்கப்பட்டது விடுதலைப்புலிகளின் தலைவர் சொன்னார்; "பேரம் பேசுவது புலிகளிற்குப் பிடிக்காது உடனே புறப்பட்டு வா" இது சுற்றிவர நின்ற இந்தியர்களிற்கும் கேட்டது மாத்தையா புறப்படத்தயாரானார் மீண்டும் தொடர்பு சாதனம் ஒலித்தது என்னவாம்? மாத்தையா சொன்னார்; "உங்களுடைய செய்தியை நம்ப முடியாமலிருக்கின்றனர்" பிரபாகரன் சொன்னார்; "நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன் பேரம்- பேசுவது புலிகளிற்குப்- பிடிக்காது ஒவ்வொரு சொல்லாக அழுத்தமாகக் ஒலித்தது மாத்தையா புறப்பட்டார்.

★ ★

திபேந்தர் சிங் புலிகளிடம் 4 தடவைகள் காலக்கெடு கேட்டிருந்தார். என்று கூறப்படுகிறது. ஆனால் ஐந்தாம் திகதி பிற்பகல் 4.45 மணியளவில் டிக்சிற் - ஜே. ஆர். பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததாக ஐ பி கே எவ். புலிகளிடம் அறிவித்தது.

பிரிகேடியர் ஜெயரட்ண (பின்னர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டவர் தயாரானார். அவருடைய 3 துருப்புக்களும் உசாராயினர் புலிகளும் தயாராயினர். மரணத்தைச் சுவைப்பதற்கு.

ஜெயரட்ணவின் துருப்புக்கள் புலிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் பல திசைகளாலும் பாய்ந்தார்கள்.

றொட்றிக்கசும், ஏனைய ஐ பி. கே. எவ் தளபதிகளும் பேசாமலிருந்தார்கள்.

ஆனால் புலிகள் முந்திக் கொண்டார்கள்.

பிற்பகல் 5.05 மணியளவில் புலேந்திரன், குமரப்பா உட்பட 9 பேர் ஸ்தலத்திலேயே இறந்து போயினர் மூவர் ஆஸ்பத்திரியில் இறந்தனர் ஐவர் உயிர் பிழைத்தனர்

போர் இல்லாத 70 நாட்களும் முடிவுக்குவந்தன தளபதி திபேந்தர் சிங் முன்னுணர்ந்தது போல இலக்கற்றதும் முடிவற்றதுமான ஒரு யுத்தத்தில் ஐ பி கே.எவ். இறங்கியது

தீவிரவாதிகளோடோ கலந்து பேசாமல் செய்து கொண்ட போதே, தனது 'நடுவர்' ஸ்தானத்திலிருந்தும் விலகிவிட்டார் அதாவது தமிழர்களை அவர் (அவர்களது விருப்பங்கள் பற்றிக் கவலைப்படாமல்) தத்தெடுத்துக் கொண்டார்-

ஜெயவர்த்தனாவை வழிக்குக் கொண்டு வரும் அதே நேரம்புலிகளிற்கும் ஒருபாடம் படிப்பிக்கவேண்டும் என்பதில் ராஜீவ் உடன் படிக்கைக்கு வெகு முன்பே தீர்மானித்து விட்டிருந்தார்- ஒபரேஷன் பூமாலை [விமானத்தில் வந்து உணவுப் பொதிகள் போட்ட நடவடிக்கை கொழும்பிற்கும் அதேசமயம் புலிகளுக்குமான ஒரு அச்சுறுத்தல் தான் புலிகளின் பேரம் பேசும்சக்தி அவர்களின் இராணுவப் பலம் தான் என்று புதுடில்லி கருதியது எனவே அந்த இராணுவ பலத்தை முறியடிப்பதாலோ நசுக்குவதாலோ புலிகளைத் தன் பிடிக்குள் கொண்டுவந்து விடலாம் என்றும் புதுடில்லி நம்பியது இதை ஒரு யுத்தத்தின்மூலம் சாதிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள் இதன்படி உடன்படிக்கைக்குப் பின்னரான நிலைமைகளை ஒரு யுத்தத்தை நோக்கி நகர்த்துவதில் புதுடில்லிக்கும் ஈடுபாடு இருந்தது திபேந்தர் சிங், சந்தேஷ் பாண்டே, றொட்றிக்கஸ் போன்ற தளபதிகள் இது விசயத்தில் அதிகம் விவரம் தெரியாதவர்களாகத் தான் காணப்பட்டார்கள் சம்பவங்களின் பின்னால்கொழும்பிலும், புதுடில்லியிலும் நிகழ்ந்து கொண்டிருந்த சதுரங்கக் காய்நகர்த்தல்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றே கருதவேண்டியுள்ளது திபேந்தர் சிங், சந்தேஷ் பாண்டே போன்றோரின் நூல்கள் இதை நிரூபிப்பனவாகக் காணப்படுகின்றன-

புலேந்திரன் பொதுமன்னிப்புக்கு உட்படமாட்டார்என்று கொழும்பில் கூறப்பட்டது தமிழ்ப்பகுதிகளில் நடந்த குற்றங்களிற்கே பொதுமன்னிப்பு பொருந்தும் என்றும் ஆனால் புலேந்திரன் தமிழ்ப் பகுதிகளிற்கு வெளியில் நிகழ்ந்த சிங்களச் சிவிலியன்கள் மீதான தாக்குதல்களோடு சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படுவதால் அவரை விசாரிக்க வேண்டியிருந்தது என்றும் கொழும்பு கூறியது

இச்சம்பவம்பற்றி மேர்வின் டி சில்வாவுடனான பேட்டியின் போது ஜே ஆர். பின்வருமாறு சொன்னார்: (லங்கா கார்டியன், 1-யூலை- 1990)

மேர்வின்:- சில புலிகள் சயனைற் அருந்திய பின்னரா, யூலை உடன்படிக்கை ஒக்டோபர் 87 இல் முறிவடைந்தது?

ஜே ஆர்:- ஆம், ஆனால் நான நிச்சயமாகக் கூறுவேன் அது ஒரு சாட்டு என்று,

மேர்வின்:- ஆனால் டிக்சிற் என்னிடம் சொன்னார் கைது செய்யப்பட்ட புலிகளை யாழ்ப்பாணத்தில் வைத்து விசாரிக்கும்படியும், அதற்குதவியாக இந்திய விமானப்படை விமானத்தில் உங்களுடைய எல்லா விசாரணை அதிகாரிகளையும் அவர்கள் விரும்பிய இடத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்றும் உங்களிடம் வாதாடியதாக...?

ஜே.ஆர்:- நான் என்னுடைய பாதுகாப்பு அதிகாரிகளைச் செவிமடுக்க வேண்டியிருந்தது- ஆனாலும், உடன்படிக்கையை முறிப்பதற்குப்புலிகள் வேறொரு சாட்டைக் கண்டு பிடித்திருப்பார்கள் என்றே நான் நினைக்கிறேன்-

ஜே. ஆர்.:- வழமைபோல தர்க்கம் பேசுகிறார். ஆனால் சமாதானம், எப்பொழுதுமே அவரது தர்க்கத்துக்குள்வராத ஒன்றாகவே காணப்பட்டது- ஒரு அற்ப காரணத்திற்காக சமாதனத்தை இழப்பதற்கு அவர் தயாராக இருந்தார்- புலேந்திரன், குமரப்பாபோன்றோரை கொழும்பில் கொணர்ந்து விசாரிப்பதால் அவர்சிங்களவரிற்கு எத்தகைய வெற்றியைப் பெற்றுத்தர விரும்பினார்? அந்த நேரத்தில், சமாதானத்தை விடவும் மிக அரிதான வெற்றி எதுவும் சிங்களவர்களிற்கு வேண்டியிருந்ததா? இலங்கைத்தீவில் சமாதானம் எனப்படுவது ஒரு அற்புதத்தைப் போன்றது என்று நன்கு தெரிந்திருந்தும், யுத்தத்திற்கேதுவான உணர்ச்சிகரமான விவகாரம் ஒன்றில் ஏன் அவர் பிடிவாதம் பிடித்தார்? துரோணர்களையும் அர்ச்சுனர்களையும் பொருதச் செய்வதில் தன்னுடையது சகுனி பாத்திரம் என்பதாலா?

கைது செய்யப்படுகையில் புலிகள் அவர்கள் வழமையாகப் பாவிப்பதைவிட வலுக்குறைந்த படகொன்றிலேயே சென்றதாகக் கூறப்படுகிறது. கைது செய்யப்படுகையில் அவர்கள்ஆயுதங்களுடனிருந்ததாகக் கொழும்பு கூறியது. ஆனால் அவை தற்காப்பிற்கான ஆயுதங்கள் என்றும், இது ஐ- பி- கே- எவ்-விற்கும் தெரியும் என்றும் புலிகள் கூறுகிறார்கள். சாதாரண நிலைமைகளின் கீழ் கைது செய்யப்பட முடியாத தளபதிகளும், வீரர்களும் கடற்படையினரிடம் பிடிபடக் கூடியதாக இருந்தது என்பது, யூலை உடன்படிக்கையிலுள்ள பொது மன்னிப்புக்குரிய சூழ்நிலைகளின் கீழேயே சாத்தியமாகியது. ஆனால் உடன்படிக்கையின் பொது மன்னிப்பு மீறப்பட்ட போது, அவர்கள் தமது 'மரபின்' படி தொழிற்பட்டார்கள். இதைச் சூரிய நாராயணின் வார்த்தைகளில் பின் வருமாறு சொல்லலாம்: 'எதிரியின்' இரக்கத்தில் தங்கியிருப்பதை விடவும், தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்வதற்கே அவர்கள் முதன்மை கொடுக்கிறார்கள்"

# செய்வதாகச் சொல்கிறார்கள் எதுவும் காரியமாவதில்லை

சர்வதேச அளவில் வெள்ளைப் பிரம்பு கண்பார்வையற்றவர்களுக்கு ஒரு சின்னம். அது சர்வதேச ரீதியில்



நிறுத்தப் படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். பிரயாணிகள் ஏறி இறங்குவதற்காக பேருந்து முதலியன தரித்துச் செல்லும் இடங்களில் நிற்காமல் எங்கு வேண்டுமானாலும் நின்று போக்குவரத்து வாகனங்களை மறிக்கலாம். இயன்ற மட்டும் மக்கள் எங்களுக்கு இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும். மெக்கு வீதிகளில் தடை ஏற்படும் போது பாதசாரிகள் எமக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதனை அவர்கள் ...

நாம் தேடிப் போனாற் கூடப் பெற்றோர், உண்மையை மறைத்தும் பொய் சொல்கிறார்கள். விழிப்புலனற்றோர் வீட்டில் இல்லை என்று பெற்றோர் மற்றும் உறவினர் உண்மையை மறைக்கும் முயற்சியில் ஈடுபடும் போது அதனால் பாதிக்கப் படுபவர்கள் விழிப்புலனற்றோர் என்பதை மற்றவர்கள் உணர்வதில்லை இன்றும் சிலருக்குத் தமது பிள்ளைகளுக்குக் கண் பார்வை இல்லை அல்லது குறைவு என்று வெளியில் ...



தகவலை அனுப்பினார் கைது செய்யப்பட்டவர்களை உடனடியாகக் கொழும்பு கொண்டு வரும்படியும் இதற்கென விசேட விமானம் ஒன்று கொழும்பிலிருந்து பலாலிக்கு அனுப்பப்படும் என்றும்கொழும்பு அறிவித்தது.

இதற்கிடையில் தமதுசகாக்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் புலிகளிற்குத் தெரிந்து விட்டது. அவர்கள் ஐ பி கே எவ் தலைபதிகளைஅணுகினார்கள். உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக்கிணங்க கைது செய்யப்பட்ட தமது சகாக்களை விடுதலை செய்யும்படி புலிகள் ஐ.பி.கே எவ் ஐக் கோரினார்கள்.

ஐ பி கே.எவ். தளபதிகளில் ஒருவரான றொட்றிக்கஸ் புலிகளை விடுதலை செய்யும்படி ஜெயரட்ணவிடம் கேட்டார் அவர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது ஐ பீ கே எவ் இடம் ஒப்படையுங்கள் என்று றொட்றிக்கஸ் கூறினார்- ஆனால், ஜெயரட்ண, கொழும்புடன் தொடர்பு கொண்டு விட்டுச் சொன்னார், அவர்களை கொழும்புக்குக் கொண்டு வரும்படி உத்தரவிடப்பட்டுள்ளது என்று எனினும் கைது செய்யப்பட்ட புலிகளை அவர்களது சகாக்கள் சந்திப்பதற்கு அவர் அனுமதி தந்தார்-

றொட்றிக்கஸ் சில இந்தியத் துருப்புக்களை புலிகளிற்குக் காவலாக நிறுத்த விரும்பினார்- ஜெயரட்ண சம்மதித்தார்- ஆனால இந்தியத்துருப்புக்கள், புலிகளைக் காவல் செய்த சிறிலங்காத் துருப்புக்களிடமிருந்து 10 யார்கள் தள்ளி நிற்கவேண்டும் என்றும் அவர் கூறினார்-

மிகவும் குறுகிய காலத்துள் 3000 இற்கும் மேற்பட்ட மக்கள் திரள் ஒன்றுபலாலிமுகாம் வாசலை வந்தடைந்தது மக்கள் 17 புலிகளையும் விடுவிக்குப்படி ஆத்திரத்தோடு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

றொட்றிகஸ், ஜெயரட்ணவின் தற்காலிக அலுவலகத்திற்குச் சென்று திரும்பவும் ஒரு முறை புலிகளை விடுவிக்கக் கேட்டார். ''நீங்கள் அவர்களைக் கொழும்புக்குக் எடுத்துச் செல்ல முயன்றால், ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமிற்குள் பலவந்தமாக நுழைந்து விடுவார்கள் நாங்கள் எப்படி அவர்களைக் கட்டுப்படுத்துவது? பெண்களையும், சிறுவர்களையும் எங்களால் சுட முடியாது'' என்று றொட்றிக்கஸ் வாதாடினார் ஆனால் ஜெயரட்ண சொன்னார் நான் உத்தரவுகளிற்கு கீழ்ப்படிந்தாக வேண்டும் என்று,

ஜெயரட்ண விமானநிலையத்தில் புலிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று அவர்களை விமானத்தில் ஏறும்படி கேட்டார் ஆனால் அங்கு அவரிற்கு ஆச்சரியம் காத்திருந்தது புலிகளின் கைக்

பதியின் மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கைது செய்யப்பட்ட புலிகளை ஐ பி கே எவ் இடம் கையளிப்பதற்கான உத்தரவைப் பெறமுடியும்'' என்று றொட்றிக்கஸ் சொன்னார்.

ஆனால் ஜெயரட்ண பிடிவாதமாயிருந்தார் எனவே றொட்றிக்கஸ் அவரை மிரட்டலானார் ''கைதிகளோடு உங்கள் விமானம் மேலெழுவதை நான் அனுமதிக்கமாட்டேன் கவசவாகனங்களை

## நிலாந்தன்

விமான ஓடுபாதைக்குச் செல்லும்படி நான் உத்தரவிடுவேன்'' ஜெயரட்ண மிரளவில்லை அவர் சொன்னார்: ''நான் உங்களுடைய கவசவாகனங்களைச் சுடுவேன் ஐயா''

எனினும் ஜெயரட்ண இன்னுமொரு முறை கொழும்புடன் தொடர்பு கொண்டார் ஆனால் கொழும்பு சொன்னது ''இன்னும் இரண்டு மணித்தியாலங்களிற்குள் நீங்கள் கைதிகளைக் கொழும்புக்கு அனுப்பாவிட்டால் உங்களுடைய பொறுப்புக்களை உங்களுக்கடுத்த அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு, கைது செய்யப்படுவதற்காகக் கொழும்பிற்கு வரவும்''

ஜெயரட்ண செயலில் இறங்கினார் தன்னிடமிருந்த துருப்புக்களில் பலசாலிகளான 34 பேரைத் தெரிவு செய்தார் தன்னுடைய சைகை கிடைத்ததும் புலிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்த அறைக்குள் பாய்ந்து அவர்கள் சயனைற் அருந்துவதைத் தடுக்க வேண்டும் என்று அவர்களிற்கு அறிவுறுத்தினார் மருத்துவர்களும், அம்பியூலன்ஸ்களும், வாந்தி எடுக்கச்செய்யும பம்பிகளும் தயாராக வைக்கப்பட்டன.

★ ★

புலிகள் தமது சகாக்களை மீட்பதற்காக ஐ-பி-கே-எவ் தளபதிகளை நெருக்கிக் கொண்டிருந்தார்கள்- தளபதி திபேந்தர் சிங் புலிகளிடம் கால அவகாசங்கள் கேட்டார் டிக்சிற் ஜே-ஆர் உடன் பேசி நல்லமுடிவுக்கு வருவார் என்றும் அவர் கூறினார் புலிகளின் தலைவர் இந்தியப் பிரதமர் ராஜீவிற்கு ஒரு கடிதம் வரைந்தார் கடிதத்தை திரு.மாத்தையா எடுத்துச் சென்று ஐ-பி.கே-எவ் தளபதிகளிடம் கொடுத்து, புதுடில்லியின் பதிலை ஒரு மணிநேரத்தில் எதிர்பார்ப்பதாகக்கூறினார்.

பதில் வந்தது. டிக்சிற் புதுடில்லி சார்பாகப் பதிலை அனுப்பியிருந்தார் அதில் சில நிபந்தனைகள் இருந்ததாகப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன அது பிடிபட்ட தள

துருப்புக்களும் உசாராயினர் புலிகளும்தயாராயினர். மரணத்தைச் சுவைப்பதற்கு.

ஜெயரட்ணவின் துருப்புக்கள் புலிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் பல திசைகளாலும் பாய்ந்தார்கள்.

றொட்றிக்கசும், ஏனைய ஐ பி. கே. எவ் தளபதிகளும் பேசாமலிருந்தார்கள்.

ஆனால் புலிகள் முந்திக் கொண்டார்கள்.

பிற்பகல் 5.05 மணியளவில் புலேந்திரன், குமரப்பா உட்பட 9 பேர் ஸ்தலத்திலேயே இறந்துபோயினர் மூவர் ஆஸ்பத்திரியில் இறந்தனர் ஐவர் உயிர் பிழைத்தனர்

போர் இல்லாத 70 நாட்களும் முடிவுக்குவந்தன தளபதி திபேந்தர் சிங் முன்னுணர்ந்தது போல இலக்கற்றதும் முடிவற்றதுமான ஒரு யுத்தத்தில் ஐ பி கே.எவ். இறங்கியது

(மேற்படிவிபரங்கள் 'சண்டேரைம்ஸில்' (ஒக்டோபர்- 1-1989) சுஜீஸ்வர சேனதீர எழுதிய தகவல்களோடு. விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை சமீபத்தில் வெளியிட்ட 'திருவில்தி' என்ற நூலில் காணப்பட்ட சிலதகவல்களையும் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளன)

★ ★

இச் சம்பவம், புலிகளிற்கும் புதுடில்லிக்கும் இடையில் முன்னிருந்தே நிலவி வந்த கசப்புணர்வுகள் ஒருமுடிவற்ற போராக வெடிப்பதற்குரிய கடைசிப் பொறியாக அமைந்தது புலிகள் இதை ஒரு இந்திய - இலங்கை கூட்டுச்சதி என்று வர்ணிக்கிறார்கள் ஜே. ஆர் இதனை 'நடுவர்ராஜீவை என் பொருட்டாக மோதலில் ஈடுபடக் களத்தில் இறங்கிய'' சம்பவம் என்று கூறியுள்ளார். இந்திய விமர்சகர் சூரியநாராயணம் தனது பீஸ்ட்ரப் (சமாதானப்பொறி) என்ற நூலில் இச் சம்பவம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் ...

ஒரு பிராந்திய வல்லரசு என்ற மிதப்பில் சிறிலங்காவிற்குள் சென்ற இந்தியா பிடிபட்ட புலிகளை விடுவிப்பதில் கொழும்பு அரசை இணங்கச் செய்வதிலோ அல்லது அதன் மீது நெருக்கடிகளைப் பிரயோகிப்பதிலோ தோல்வியடைந்தது. இந்தியாவின் அரசியற் தோல்வி என்பது நிச்சயமாக வேறொரு கதைதான் வல்லரசுகளின் சங்கத்தில், தனது அரசியற் பாடக் கொப்பியில் மையைச் சிந்திக் கொண்ட ஒரு செயல் நயமற்ற பாடசாலைச் சிறுவனைப் போல இந்தியா காணப்பட்டது''

ஜே ஆர்- கூறியது போல 'நடுவர்ராஜீவ்' ஆடுகளத்தில் ஒரு அணியினருக்குச் சார்பாக இறங்கியது என்பது இச் சம்பவத்தோடு தான் என்பதல்ல. இதற்கு முன்னரேயே 'நடுவர் ராஜீவ்' தமிழர்கள் மீதான உடன் படிக்கை ஒன்றைத் தமிழ் மித்வா திக்ளோடோ

# செய்வதாகச் சொல்கிறார்கள் எதுவும் காரியமாவதில்லை

சர்வதேச அளவில் வெள்ளைப் பிரம்பு கண்பார்வையற்றவர்களுக்கு ஒரு சின்னம். அது சர்வதேச ரீதியில்



ஆ. இரவீந்திரன்

அங்கீகரிக்கப்பட்ட அடையாளச் சின்னம். அமெரிக்கா இலிநோய் மாநிலத்தில் உள்ள பியோரியா என்ற இடத்தில் லயன்ஸ் கிளப்பின் முயற்சியால் 1931- இல் வெள்ளைப் பிரம்பு விழிப்புலனற்றோரின் சின்னமாக முதலில் அங்கீகாரம் பெற்றது இந்த அடிப்படையிலிருந்து படிப்படியாக வெள்ளைப் பிரம்பை விழிப்புலனற்றோரின் சின்னமாக மற்ற நாடுகளும் அங்கீகரித்தன இந்த நிலையில் தான் 1969 இல் கொழும்பில் கூடிய அகில உலக கண்பார்வையற்றோர் சம்மேளனம் விழிப்புலனற்றோருக்கான சர்வதேசதினமாக வெள்ளைப் பிரம்பு தினம் (White Cane Day) கொண்டாடப் படவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப் பட்டது அத்துடன் இத்தினம் சர்வதேச அந்தஸ்தைப் பெற்றது. யாழ்ப்பாணத்தில் விழிப்புலனற்றோர் சங்கம் 1976 இல் ஸ்தாபன ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. 1978 முதல் முதல் லயன்ஸ் கிளப்பின் ஒத்தாசையுடன் வெள்ளைப் பிரம்பு தினத்தைக் கொண்டாடி வருகிறோம். யாழ்ப்பாணத்தில் இத்தினத்தை ஒக்டோபர் 18 ஆம் திகதி கொண்டாடவுள்ளோம் என்றார் இரவீந்திரன்.

வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாதையிலிருந்து விலகிக் குறுக்கே செல்லும் போது அல்லது வீதியைக் குறுக்கே தாண்டும் போது வெள்ளைப் பிரம்பை மடித்துக் காட்டுகிறோம். வழக்கமான பக்கத்தில் நிற்காமல் பக்கம் மாறி நின்று பேருந்தை நிறுத்தினால் அல்லது நிறுத்தும் குறியைக் காட்டினால் பேருந்துகள் நிறுத்தப் படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். பிரயாணிகள் ஏறி இறங்குவதற்காக பேருந்து முதலியன தரித்துச் செல்லும் இடங்களில் நிற்காமல் எங்கு வேண்டுமானாலும் நின்று போக்குவரத்து வாகனங்களை மறிக்கலாம். இயன்ற மட்டும் மக்கள் எங்களுக்கு இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும். நெருக்கு வீதிகளில் தடை ஏற்படும் போது பாதசாரிகள் எமக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதனை அவர்கள் மனிதாபிமானத்துடன் செய்ய வேண்டும். அப்படி உதவி செய்ய விரும்பாத சந்தர்ப்பங்களில் எங்களுக்கு இடையூறு செய்யாமல் விலகிப் போவதே பெரியஉதவியாகும் சிலர் எங்கள் வெள்ளைப் பிரம்புகளில் ஏதோ மின்காந்தம் அல்லது இலக்ட்றோனிக் கருவி பொருத்தியிருப்பதாக

> சில அமைப்புகள் ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டது போல் பிரமையை உண்டு பண்ணி விடுகிறார்கள் மனித நேய ஸ்தாபனங்கள் எதுவும் காத்திரமான பங்களிப்பைச் செய்வதில்லை. பெயளுக்கு உதவுகிறார்கள் அல்லது பெயரளவில் உதவுகிறார்கள் மீனைத் தருவதை விட மீனைப் பிடிக்கும் வழியைக் கற்றுத் தந்தால் போதும்.

நம்புகிறார்கள். ஆனால் அப்படி ஒன்றும் பொருத்தப் படவில்லை. மக்கள் வெள்ளைப் பிரம்பைப் பற்றிப் புரிந்துகொண்டு அதற்கேற்றபடி நடந்து கொண்டால் போதும் அது நல்ல பயனை எங்களுக்கு அளிக்கும்,

### விழிப்புலனற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கண்பார்வை இல்லாமல் பிறந்து விட்டவர்கள் விழிப்புலனை இன்னோரென்ன காரணங்களுக்காக இழந்தவர்கள் எனச் சுமார் பத்தாயிரம் பேர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள் போர்க்காலச் சூழ்நிலைமயால்இந்தஎண்ணிக்கை இன்னும்அதிகரித்திருக்காலம். ஆனால் பெரும்பான்மையான விழிப்புலனற்றோர் தமது கட்டுப்பெட்டி வாழ்க்கையிலிருந்து முன்னுக்கு வந்து பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதில்லை பொதுவாகவிழிப்புலனற்றோர் விவகாரத்தில் பெற்றோரின் தெரியாத்தனமும் தடையாக இருக்கிறது. விழிப்புலனற்றோரை நாம் தேடிப் போனாற் கூடப் பெற்றோர், உண்மையை மறைத்தும் பொய் சொல்கிறார்கள். விழிப்புலனற்றோர் வீட்டில் இல்லை என்று பெற்றோர் மற்றும் உறவினர் உண்மையை மறைக்கும் முயற்சியில் ஈடுபடும் போது அதனால் பாதிக்கப் படுபவர்கள் விழிப்புலனற்றோர் என்பதை மற்றவர்கள் உணர்வதில்லை இன்றும் சிலருக்குத் தமது பிள்ளைகளுக்குக் கண் பார்வை இல்லை அல்லது குறைவு என்று வெளியில் சொல்ல வெட்கப்படும் ஒரு கௌரவம். காசு வசதியுள்ள பெற்றோர் சிலர் மித மிஞ்சிய பாசம் காரணமாக கண்பார்வையற்ற பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தாமே கவனித்துக் கொள்ளலாம் என்ற தவறான முடிவுக்கு வந்து விடுகிறார்கள். பெற்றோர் இறந்த பிறகு கண்பார்வையற்றோர் பணத்தை வைத்து நிர்வகிக்கப் போவதில்லை. கண்பார்வை யற்றவர்களுக்கு ஆரம்பம்முதல் பயிற்சியும், பிரத்தியேக கல்வியும், சமூக ஊட்டமும் அவசியமாகின்றது. விழிப்புலனற்றோரின் வளமான வாழ்வுக்கு முதற் கட்ட உதவியாக பெற்றோரின் பங்களிப்பு முக்கியம்.

### கல்வி அனுபவம்

★ அனைவருக்கும் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி என்று ஒன்று இருப்பதாக வைத்துக் கொண்டாலும்கூட,

> சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் ஒக்டோபர் 15 ஆம் திகதியாகும் ஆனால் வசதி கருதி இத் தினத்தைப் 15 ஆம் திகதிக்கு முன்பு அல்லது பின்பு அனுஷ்டிப்பதும் உண்டு. இம்முறை யாழ்ப்பாணத்தில் வெள்ளைப் பிரம்பு தினம் ஒக்டோபர் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. வெள்ளைப் பிரம்பு தினம் மற்றும் விழிப்புலனற்றோர் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் விழிப்புலனற்ற இரு சகோதரர்களான ஆறுமுகம் இரவீந்திரன் (வயது 28) அவர்களையும், அவரது சகோதரர் பரமேஸ்வரனையும் சட்டநாதர் கோயிலுக்கு அண்மையில் உள்ள அவர்கள் இல்லத்தில் சந்தித்தோம். விழிப்புலன் இல்லாததால் பிரச்சினைகளின் முற்றுகையில் அவர்கள் வாழ்வதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில், மரபு சார்ந்த சமுதாயத்தின் நடப்பியல் அவர்கள் புறவாழ்வில் ஏற்பட்ட பாதிப்பு அவர்களது அடிமனதில் பதிந்துள்ளது.
>
> இரவீந்திரன் திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தை ஒரு கலைப் பட்டதாரி. யாழ்ப்பாணத்தில் நிறுவனமொன்றில் தட்டெழுத்தாளராகப் பணிபுரிகிறார். தம்பி பரமேஸ்வரன் க. பொ. த. (உயர்தரம்) மாணவர். அவர்கள் தெரியப்படுத்திய கருத்துகள் இங்கு தரப்படுகின்றன.

விழிப்புலனற்றவர்கள் அந்த அனுபவத்தை முற்றாகப் பெறுவதில்லை. இது தவிர, கண்பார்வையற்றோர் தடவிப் பிடித்துப் படிப்பதற்கான புடைப்பான அச்சு - எழுத்து பிரெய்ல் முறை(பிரான்சு நாட்டைச் சேர்ந்த Louis Braille



பரமேஸ்வரன்

யால்1820 -இல்கண்டுபிடிக்கப்பட்டது) நூல்கள் பொதுவான பாடங்களில் இல்லை. பாடம் சம்பந்தப்பட்ட நூல்கள் ஆரம்பநிலைமுதல் பல்கலைக்கழகம் வரை இல்லை. எமக்கென்று பிரத்தியேகமான தடித்த கடதாசிகள், எழுது கருவிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் எதுவும் எமக்கு பாடசாலைகளில் தரப்படுவதில்லை. இவற்றை எல்லாம்

## பேட்டி மதன்

சமாளித்துத் தடைகளைத் தாண்டி க. பொ. த (உயர்தரம்) மற்றும் பல்கலைக் கழக மட்டத்திற்கு வந்தால் எமது கல்வி வளத்துக்கான சாத்தியப் பாடுகள் எமக்கு எட்டாப் பழம். விரிவுரைகளைப் பதிவு செய்து மீளவும் கேட்பதற்குப் பதிவு நாடாக்கள் இல்லை கசற்களுக்குப் பாவிக்க மின்கலங்கள் இல்லை அப்படிக் கிடைத்தாலும் யாழ்ப்பாணத்தில் இல்லை. கைதடியில் ஒரு பள்ளிக் கூடம் உள்ளது. அங்கு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

ஈழநாதம்

# அணுசக்தி தொழில் நுட்பம் பாகிஸ்தானுக்கு சீனா வழங்கும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு அணுசக்தி தொழில் நுட்பத்தை வழங்க சீனா முன்வந்துள்ளது.

பாகிஸ்தான் அணுசக்தி பரிசோதனை நிலையங்களை நிறுவியுள்ளதாக தெரியவந்ததை அடுத்து இரண்டு வருடங்களுக்கு முன் அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ உதவிகளை நிறுத்தியிருந்தமை தெரிந்ததே.

சீனாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே நட்புறவை விருத்திசெய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் இந்நாடுகள் செய்துகொண்டுள்ளன. 1960 ஆம் ஆண்டுமுதல் சீனா பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 நவம்பர் 20ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவிகள்**

1 நுண்கலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் i / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ii / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)-(நாடகமும் அரங்கக் கலைகளிலும சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து)

2 ஆங்கில இலக்கியத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் i / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ii / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

**சம்பள அளவுத் திட்டம்**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் i; ரூபா 9,600 -8 X 250 - 11,600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் ii: ரூபா 8,000 - 5X 250-9,250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்; ரூபா:3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) (தகுதிகாண்) ஆண்டு ஒன்றுக்கு

(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்

---

## பிறக்கும் பெண் குழந்தைக்கு 2,000 ரூபா கடன்பத்திரம்

### சிசுக் கொலையைத் தடுக்க முயற்சி

(டில்லி)

தமிழ் நாட்டில் பெண் சிசுக்களைக் கொல்வது சேலம் மாவட்டத்தில்தான் அதிகம் என்று ஓர் ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

பெண் சிசுக் கொலையைக் குறைக்கும் நோக்கத்துடன் சேலம் மாவட்டத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்குத் தலா 2 000 ரூபாவுக்குக் கடன் பத்திரங்கள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தொகை முதிர்ச்சி பெற்று 20,000 ரூபாவாக குறிப்பிட்ட பெண்களுக்குக் கிடைக்கும்.

சேலம் மாவட்டத்தில்தான் பெண் சிசுக் கொலைகள் அதிகமென்பதால், இத்திட்டம் முதலில் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ப்புத் துறைச் செயலாளர் டில்லியில் தெரிவித்தார்.

---

இவ்வாண்டுக்கான

## நோபல் சமாதான பரிசு பற்றி நோர்வீஜிய டெலிவிசன் ஊகம்

(ஒஸ்லோ)

லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கௌதமாலாவின் மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த றிகோ பெரியா மெஞ்சு என்பவரும், சர்வதேச இரட்சண்ய சேனை அமைப்பும் 1992 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நோபல் சமாதானப் பரிசுக்கு அதிக ஆதரவைப் பெற்றிருப்பதாக நோர்வீஜிய டெலிவிஷன் கூறியுள்ளது.

கௌதமாலா நாட்டின் இராணுவத்தை எதிர்த்தமைக்காக றிகோ பெரியா மெஞ்சுவின் தாய், தந்தை, சகோதரன் ஆகியோர் கொல்லப்பட்டனர் என்பதோடு மெஞ்சு இடதுசாரி கெரிலாக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

---

## போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர், வைத்திருப்போர் எமக்கு

---

சந்தனக் கடத்தல்

## வீரப்பனைக் கைதுசெய்ய இராணுவ நடவடிக்கை

சந்தனமரக் கடத்தல்காரர் எனக் கூறப்படும் வீரப்பனைக் கைதுசெய்ய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இப்பணியில் மத்தியதுணை இராணுவப் பிரிவு ஈடுபடுத்தப்படும். இதுபற்றி மத்திய அரசு கர்நாடக அரசுக்கு தகவல் ஒன்றை அனுப்பியுள்ளது.

---

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி

## போதனாசிரியர்கள் விரிவுரையாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியைச் சேர்ந்த போதனாசிரியர்கள் விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இராமநாதன் அக்கடமியில் கடமையாற்றும் எட்டுப்போதனாசிரியர்களில் ஆறுபேருக்கே விரிவுரையாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனக் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆங்கிலமொழி கற்பிக்கும் நிலையத்தைச் சேர்ந்த போதனாசிரியர்கள் இதேபோன்று தமக்கும் விரிவுரையாளர் பதவி கிடைக்காததையிட்டு அதிருப்தியுற்றிருக்கிறார்கள். ஆங்கில போதனாசிரியர்கள் பதவி உயர்வு ஏனைய பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடையதென்றும், இது சம்பந்தமாகப் பல்கலைக் கழகங்கள் மான்யக் குழுவே முடிவெடுக்க வேண்டும் என்று யாழ் பல்கலைக் கழக நிர்வாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

---

## நாளை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நொத்தாரிசுகளுக்கான போட்டிப் பரீட்சை நாளை கொழும்பில் திட்டமிட்டபடி நடைபெற உள்ளதாக கொழும்பில் இருந்து எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க), (ச)

---

## நவாலிப்பகுதியில் வயிற்றோட்டம்

(யாழ்ப்பாணம்)

அசுத்தமான கிணற்று நீரினை குடிநீருக்காக பாவித்தவர்களில் 12 பேர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையினால் அராலியில் இருந்து இடம் பெயர்ந்து நவாலிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கே இந்நோய் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவாலி வயல் கரைப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள நுளம்புத்தொல்லையால் சிறு குழந்தைகளுக்கும் நோய் பரவலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

---

## அசர்பைஜான் அங்கம் வகிக்காது

சுதந்திர நாடுகளின் பொது

---

## விஜயகுமாரணதுங்க நினைவு முத்திரை

காலஞ்சென்ற விஜயகுமாரணதுங்கா நினைவாக ஒரு ரூபா பெறுமதியான முத்திரையொன்றை வெளியிட முத்திரை வெளியீட்டுப் பணியகம் முடிவு செய்துள்ளது இன்று வெள்ளிக்கிழமை காலை தபால்துறை அமைச்சர் ஏ எம் எஸ் அதிகாரி இந்த முத்திரை வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு முதல்நாள்உறையை விநியோகிப்பார்

---

## குமண

முகத்தில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 'குமண' வில் பொருள்கள் ஏற்றிமுடிந்தவுடன் மிகவிரைவில் பருத்தித்துறையை வந்து சேரும் எனவும் 'குமாரி' இன்று பருத்தித்துறையை வந்தடையும் எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

---

## புலிகளின்

இந்தப் புத்தகம் சில வாரங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


---

## சடலங்களின்

டிகளில் அபயக்குரல்கள் நின்று விட்டன.

நான் சற்று தலையை

---



## 84,000 தொழிலாளரை நாடு கடத்தும் திட்டம்

அரசாங்கம் இன்று 84,000 மலையக மக்களை நாடுகடத்த திட்டம் கொண்டு வந்துள்ளது. கடந்த அரை நூற்றாண்டுக்கு முன்பு மலையக மக்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்த போது அதை மலையக மக்கள் அமைதியாக ஏற்றுக் கொண்டனர். இனிமேலும் அவ்வாறு இருக்க முடியாது. இவ்வாறுதொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந் நாட்டுக்காக 200 ஆண்டுகள் உழைத்த தோட்டத் தொழிலாளர்கள் ஒப்பந்தங்கள் மூலம் நாடு கடத்தப்பட்டனர். இது மாபெரும் பாதகமானசெயல் மட்டுமல்ல சர்வதேச மனித உரிமைகளையும் மீறிய செயலாகும். இந்த மக்களுக்கு இன்றுவரை இந்தியாவில்உருப்படியானபுனர்வாழ்வுத் திட்டங்கள் இல்லாமல் வீதிகளிலும் அகதி முகாம்களிலும்பிச்சைக்காரர்களைபோல காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள் இந்த நிலையில் 84,000 பேரை நாடு கடத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இத்திட்டம் அமுலானால் இவர்களுக்கும் அதே நிலை உருவாகும். இதனைத் தடுக்க அனைத்து தொழிலாளர்களும் முன்வர வேண்டும் என்றார்.

---

## மத்திய

மன்றம் இது தொடர்பாக 4 வாரகாலத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

---

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
நடாத்தும்

**முழுநிலா நாள் அறிவியலரங்கு**

காலம்:- 11-10-92 ஞாயிறு

நிகழ்ச்சிகள்:-

★ மாலை 3.30 – 4.15

'அந்நிய செலாவணி விகித நிர்ணயமும் அதன் சமகாலப் போக்குகளும்'

திரு. கா. கந்தையா சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

★ 4.15 – 5.00

வுரையாளர் தரம் ii /உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

**சம்பள அளவுத் திட்டம்**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் i; ரூபா 9,600 -8 X 250 - 11,600/- (மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் ii: ரூபா 8,000 - 5X 250-9,250/- (மாதமொன்றுக்கு)
உதவி விரிவுரையாளர்; ரூபா:3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) (தகுதிகாண்) ஆண்டு ஒன்றுக்கு
(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா - 4,500/ 10X200 - 6500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x10 சதமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை யொட்டப்பெற்ற தபால்உறையை அனுப்புதல் வேண்டும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
1992.10.07

(சி-5193)

# நோபல் சமாதான பரிசு பற்றி நோர்வீஜிய டெலிவிசன் ஊகம்

(ஒஸ்லோ)

லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கௌதமாலாவின் மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த றிகோ பெரியா மெஞ்சு என்பவரும், சர்வதேச இரட்சண்ய சேனை அமைப்பும் 1992 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நோபல் சமாதானப் பரிசுக்கு அதிக ஆதரவைப் பெற்றிருப்பதாக நோர்வீஜிய டெலிவிஷன் கூறியுள்ளது.

கௌதமாலா நாட்டின் இராணுவத்தை எதிர்த்தமைக்காக றிகோ பெரியா மெஞ்சுவின் தாய், தந்தை, சகோதரன் ஆகியோர் கொல்லப்பட்டனர் என்பதோடு மெஞ்சு இடதுசாரி கெரிலாக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர், வைத்திருப்போர் எமக்கு ஆவணத்திற்கு இரு பிரதிகளை அனுப்பியுதவவும்.

மாவீரர் படிப்பகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

[3335]


# வீர நினைவாகி எம் நெஞ்சமதில்......

மண்டைதீவில் வித்தாக
வீரவேங்கை
**ராஜ்**



(தங்கவேலாயுதம் ஜெயராஜ்)
பிறப்பு:
26.08.1976
வீரச்சாவு:
25.08.1990

வீரம் விளையும் எம்
செந்தமிழ் மண்ணில்
பகைவர் இருப்பதோ?
என்றெழுந்தீர்.



திரு. தங்கவேலாயுதம்
பிறப்பு:
09.09.1946
துரோகிகள் அழிப்பில்:
19.06.1989
(தாளையடி மயிலிட்டி)

நெருப்பாகித் துவக்கேந்தி
களத்தில் பகையழித்தெம்
மண்மீதே விழுந்தீர்.
விழுந்தீரா?

மணலாறில் வித்தாக
கப்டன்
**வரதப்பா**



(கந்தக்கண்ணன்)
[தங்கவேலாயுதம் ஜெயராஜ்]
பிறப்பு:
15.12.1972
வீரச்சாவு:
24.09.1991

இல்லை இல்லை
ஆயிரமாயிரம் புலிவீரராய்
மீண்டும் எம்மண்ணில்
பிறப்பெடுத்தீர்.

மாவீரர் வீதி, (காரைக்கால் வீதி)
இணுவில் கிழக்கு, கோண்டாவில்.

(சி-5191)

— குடும்பத்தினர்

**வயிற்றோட்டம்**

(யாழ்ப்பாணம்)

அசுத்தமான கிணற்று நீரினை குடிநீருக்காக பாவித்தவர்களில் 12 பேர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையினால் அராலியில் இருந்து இடம் பெயர்ந்து நவாலிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கே இந்நோய் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவாலி வயல் கரைப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள நுளம்புத்தொல்லையால் சிறு குழந்தைகளுக்கும் நோய் பரவலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

**அசர்பைஜான் அங்கம் வகிக்காது**

சுதந்திர நாடுகளின் பொது நலவாய அமைப்பில் உறுப்பினராக தொடர்ந்தும் இருக்கப் போவதில்லையென அசர்பைஜான் குடியரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் அசர்பைஜான் அதிபர் இணைவதாக எடுத்த முடிவை தற்போது அசர்பைஜான் பாராளுமன்றம் நிராகரித்துள்ளது,

'குமண' கப்பலில் ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 'குமண' வில் பொருள்கள் ஏற்றிமுடிந்தவுடன் மிகவிரைவில் பருத்தித்துறையை வந்து சேரும் எனவும் 'குமாரி' இன்று பருத்தித்துறையை வந்தடையும் எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

**புலிகளின்**

இந்தப் புத்தகம் சில வாரங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**சடலங்களின்**

டிகளில் அபயக்குரல்கள் நின்றுவிட்டன.

நான் சற்று தலையை நிமிர்த்தி ஒற்றைக் கண்ணைத் திறந்து பார்த்தபோது இரு கடற்படையினர் எமது படகிற்குள் இறங்கி வெளி இணைப்பு இயந்திரத்தைக் கழற்றி அருகில் நின்ற மற்றக் கடற்படைக் கப்பலில் கொடுத்துவிட்டு எமது படகைத் தமது படகுடன் இணைத்துக் கட்டியபின் தமது படகுடன் இழுத்துச் செல்வதை உணர்ந்தேன். அப்போது படகிற்குள் அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் எனக் கருதுகிறேன்.

சிலநிமிடத்தில் அப்பகுதியில் வந்துகொண்டிருந்தமற்றொரு படகுமீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அப்படகு எனது மூத்த சகோதரரினுடையது அவர் நெல் மூடைகளை ஏற்றி வந்தவர். துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதும் அவர்கள் குதித்து தப்பிக் கொண்டனர். படையினர் அப்படகையும் எமது படகுடன் பிணைத்தனர்.

பின்னர் அதனையும் இழுத்துக் கொண்டு மிகவும் மெதுவாக பூநகரிப்பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது நான் மெதுவாக பாய்க்குள்ளிருந்து கடலினுள் பாய்ந்து நீந்திக்கரைக்கு வந்தேன்என்றார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இவரது சகோதரரான ஜெயேந்திரன் தெரிவித்ததாவது எனது காலில் சூடு விழுந்தபோதும் நான் அணியத்தைப் பற்றியவாறு நின்றேன். கடற்படையினர் இரு படகுகளிலும் சுற்றிச் சுற்றி வந்து எமதுபடகை நோக்கி துப்பாக்கிப்பிரயோகத்தைமேற்கொண்டனர். இதன்போது நான் அணியத்தின் கையை விட்டு கடலில் இறங்கி ஐந்து மைல்கள் வரை காயத்துடன் நீந்திக் கரையை அடைந்தேன் என்றார். இவர் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச), (பா)

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
நடாத்தும்

# முழுநிலா நாள் அறிவியலரங்கு

காலம்:- 11-10-92 ஞாயிறு

நிகழ்ச்சிகள்:-

★ மாலை 3.30 – 4.15

'அந்நிய செலாவணி விகித நிர்ணயமும் அதன் சமகாலப் போக்குகளும்'
திரு. கா. கந்தையா சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

★ 4.15 – 5.00

'எயிட்ஸ்'
வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம்,
யாழ். மா. ந. சபை - வைத்திய அதிகாரி

★ 5.00 - 5.30

கலந்துரையாடல்

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் எமது சங்கம் மகிழ்ச்சியடைகின்றது.

ப. மா. ச
யாழ். இ. க

பா. தவபாலன்
செயலர்

(சி- 5796)

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தகைமைகள்: 8ஆம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.
உயரம்: 5' 6''
வயது: 18--30 வரை.

மேற் கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை.

(சி/5197)

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**08-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6031

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
41-1665, 26-1084

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.